மலர்-1 இதழ்-5 நவம்பர் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக வெளிவரும் இமெயில் புத்தகம்



திருமணத்தின்போது ஏழு அடி நடப்பதன் ரகசியங்கள்

பரிகார தீபம் ஏற்ற வேண்டிய வழிமுறைகள்

## உபதேசம் பெற்ற திருத்தலங்கள்

அகிலம் போற்றும்

# ஸ்ரீ கணபதி
## தோற்றமும் பொருளும்



கண + பதி = கணபதி. ஸமஸ்க்ருத அகராதிப்படி ‘கண’ என்றால் பவித்ரமான துகள்கள். ‘பவித்ரம்’ என்றால் அதி சூட்சுமமான சைதன்ய துகள்கள் என்று அர்த்தம். ‘பதி’ என்றால் ஸ்வாமி என்று அர்த்தம். ஸ்ரீ கணபதி என்றால் பவித்ரமான துகள்களின் ஸ்வாமி என்று அர்த்தம்.

**வேறு சில பெயர்கள்:** தமிழ்நாட்டில் கணபதி, ‘பிள்ளையார்’ என்று செல்லமாக அழைக்கப்படுகிறார். இதை தவிர வேறு பெயர்களும் அதன் அர்த்தமும்.

**வக்ரதுண்ட:** சாதாரணமாக ‘வக்ரதுண்ட’ என்றால் வளைந்த முகம் அல்லது துதிக்கை உள்ளவர் என்று பொருள். ஆனால் இது சரி இல்லை. ‘வக்ரான் துண்டயதி இதி வக்ரதுண்ட’. அதாவது கோணலான அல்லது தவறான வழி செல்பவரைத் தண்டித்து சரியான வழிக்கு கொண்டு வருபவர் என்று அர்த்தம். ‘திர்யக்’ அதிர்வலைகள் கோணலானவை. ரஜதம நிறைந்த 360 அதிர்வலைகளை தும்பிக்கையின் மூலமாக 108 அதிர்வலைகளாக, நேராக, ஸாத்வீகமாக மாற்றுவதே ‘வக்ரதுண்ட’ ஆகும்.

**ஏகதந்த:** ஒரே தந்தம் அகண்டமாக உள்ளதால் (இன்னொன்று உடைந்துள்ளது) இந்த பெயர் வந்துள்ளது. ‘ஒன்று’ பிரம்மத்தைக் குறிக்கிறது. ‘தந்த’ என்ற பதம் த்ரு தர்ஷயதி (அதாவது காண்பிப்பது) என்ற மூலத்திலிருந்து வந்துள்ளது. ஒன்று என்ற பிரமத்தின் அனுபூதியை உணரும் சரியான வழியைக் காட்டுவதாகவும் இன்னொரு அர்த்தம் வருகிறது.

**லம்போதரன்:** இந்த வார்த்தை லம்ப (பெரிய) மற்றும் உதர (வயிறு) என்ற இரு பதங்களின் கூட்டு வார்த்தையாகும். அண்ட சராசரங்களையும் வியாபிதுள்ளவன். அதனால் லம்போதரன் என்று அழைக்கிறோம்.

காரியங்களும் சிறப்பம்சமும்

**தடைகளை நீக்குபவர்:** கிராம திருவிழா, திருமண விழா, புதுமனை புகு விழா போன்ற எந்த ஒரு விழாவையும் தொடங்குமுன், ஸ்ரீ கணேச பூஜை செய்யபடுகிறது. விநாயகர் என்பவர்தான் விக்னஹர்தா. இவர் எல்லா தடைகளையும் நிவர்த்தி செய்து கொடுப்பவர். எனவே எந்த ஒரு காரிய ஆரம்பத்திலும் கணபதிக்கு பூஜை செய்யபடுகிறது.

**பிராண சக்தியை அதிகரிப்பவர்:** மனித சரிரத்தில் பல்வேறு நடவடிக்கைகள், பல்வேறு சக்திகளின் மூலம் நடைபெறுகின்றன. இந்த பல்வேறு சக்திகளின் மூல சக்தியை, ‘பிராண சக்தி’ என்று வழங்குவர். ஸ்ரீ கணபதியின் நாமஜபம் இந்த பிராண சக்தியை அதிகரிக்கும் தன்மை கொண்டது.

நாத பாஷையையும் பிரகாச பாஷையையும் ஒன்றோடொன்று மாற்றும் திறன் பெற்றவர்: நாம் பேசும் நாத பாஷையை (ஒலி மொழி) ஸ்ரீ கணபதியால் புரிந்து கொள்ள முடியும். எனவே தான் எளிதில் ஆனந்தம் அடையும் தெய்வமாக விளங்குகிறார். ஸ்ரீ கணபதியினால்தான் ஒலியை ஒளியாகவும், ஒளியை ஒலியாகவும் மாற்ற முடியும். மற்ற தெய்வங்களுக்கு ஒளி மொழி மட்டுமே உள்ளது.

### உருவத்தின் சிறப்பு அம்சங்களின் உள்ளர்த்தம்

**தும்பிக்கை:**

வலம்புரி தும்பிக்கை: வலப்பக்கம் வளைந்துள்ள தும்பிக்கையுடைய மூர்த்தி தெற்கு முகமானதால் தக்ஷிண் மூர்த்தியாகும் தெற்கு நோக்கிய தக்ஷிணமுகி மூர்த்தி உருவத்திற்கு பூஜை சாதாரண முறையில் செய்யபடுவதில்லை. ஏனென்றால் திர்யக் (ரஜதம) அதிர்வலைகள் தெற்கு திக்கிலிருந்து வருகின்றன. இப்படிபட்ட உருவதிற்கான வழிபாட்டில், கர்மகாண்டத்தில் எல்லா நியமங்களையும் கடைபிடித்து பூஜை மேற்கொள்வது கட்டாயமாகிறது. இதனால் சாத்வீக குணம் அதிகமாகிறது.

இடப்பக்க தும்பிக்கை: தும்பிக்கையின் நுனி இடப்பக்கம் வளைந்திருப்பது வாமமுகி மூர்த்தியாகும் வாம என்றால் இடது பக்கம் அல்லது வடக்குத் திசையாகும் இடது பக்கத்தில் சந்திர நாடி இருக்கிறது. இது குளுமையை தருகிறது. வடதிசை, ஆன்மீகத்திற்கு உகந்ததாக மற்றும் ஆனந்தம் தருவதாக இருக்கிறது. இதனால் பூஜையில் அதிகமாக இடப்பக்கம் தும்பிக்கை உள்ள ஸ்ரீ கணபதியின் உருவம் அமைக்கப்படுகிறது.




**மோதகம்:**

‘மோத’ என்றால் ஆனந்தம். ‘க’ என்றால் சிறிய பகுதி. மோதகம் என்றால் ஆனந்தத்தின் ஒரு சிறிய பகுதி. மோதகத்தின் உருவ அமைப்பு தேங்காய் போல் உள்ளது. ஸ்ரீ கணபதியின் கையிலுள்ள மோதகம் ஆனந்தத்தை அளிக்கும் சக்தியைக் குறிக்கிறது.

மோதகம் ஞானத்தின் அடையாளம் அதனால் அதை ஞானமோதகம் சொல்கிறோம். தொடக்கத்தில் ஞானம் (மோதகத்தின் மேல் உள்ள சிகரம் போல) இத்தனைதானா என்று எண்ணுகிறோம். ஆனால் பயிற்சி செய்ய செய்ய ஞானம் (மோதகத்தின் கீழ் பாகம் போல) ஆழமானது என்பது தெளிவாகிறது.மோதகம்


ஆன்மிகமலர் மெயில் புக்



அல்லது கொழுக்கட்டை எவ்வாறு இனிப்பாக இருக்கிறதோ, அதேபோல ஞானத்திலிருந்து கிடைக்கும் ஆனந்தமும் இனிக்கிறது.

மோதகம் தேங்காயைப் போன்ற உருவம் கொண்டது. தேங்காயின் ஒரு சிறப்பம்சம் தீய அதிர்வலைகளை தன்னுள் ஆகர்ஷிக்கிறது. மோதகம் அவ்வாறே பக்தர்களின் விக்னங்களை, பக்தர்களுக்கு கஷ்டம் கொடுக்கும் தீய அதிர்வலைகளை தன்னுள் இழுத்து கொள்கிறது. ஸ்ரீ கணபதி இந்த மோதகத்தை உண்கிறார் என்பது விக்னங்களை கஷ்டம் தரும் தீய சக்திகளை நாசம் செய்கிறார் என்று அர்த்தம்.

**அங்குசம்:**

ஆன்மீக ஞானம் மற்றும் ஆனந்தம் கிடைக்கும் வழியில் உள்ள தடைகளை நாசம் செய்வதற்குப் உள்ளது.

**பாசம்:**

தீய சக்திகளை சுருக்கு போட்டு அவற்றை ஒன்றாக கட்டி தூர விரட்டியடிக்கிறது.

**இடுப்பை சுற்றியுள்ள நாகம்:**

இது விஷ்வ குண்டலினி சக்தியாகும்.

**சுற்றிய நாகத்தின் படம்:**

எழுச்சி பெற்ற விழிப்படைந்த குண்டலினி சக்தியாகும்.

**முஞ்ஜூரு:**

முஞ்ஜூரு ரஜோகுணத்தின் அடையாளம். அது, ஸ்ரீ கணபதியின் கட்டுபாட்டில் உள்ளது.

– சனாதனின் புனித நூல் 'ஸ்ரீ கணபதி'

தொடர்பு : 9380949626





# அதி அற்புதம் வாய்ந்த தலவிருட்சங்கள்

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு திருக் கோயிலும் ஒவ்வொரு விதமான தலவிருட்சம் கொண்டிருக்கும். இறைவனை எவ்வாறு வணங்கு கிறார்களோ அதே போன்று அக்கோயிலின் தல விருட்சத்தையும் மக்கள் வணங்குவார்கள்.

இன்னும் சொல்லப் போனால் ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு ராசிக்கேற்ற பலனைத் தரும் மரங்கள் இருக்கின்றன. அது போன்ற மரங்களை தல விருட்சங்களாகக் கொண்ட திருக்கோயில்களை ராசிக்குரியவர் தொடர்ந்து வணங்கினால் அபரிமிதமான பலன்கள் கிடைக்கும்.

இதுபோன்று ஒரு சில கோயில்களில் தல விருட்சமாக செடி கொடி போன்றவையும் திகழ் கின்றது. அந்த வரிசையில் அதிசயம் மிக்க தலவிருட்சங்களை கொண்ட ஒரு சில திருக் கோயில்களை பார்ப்போம்.

சென்னை திருவொற்றியூரில் ஈசன் அத்திமரக் காட்டில் முனிவர்களுக்கு நடனக்கோலத்தைக் காட்டியதால் அத்தி மரமும் பின்னாளில், மகிழ மரத்தடியில் சுந்தரரின் கோரிக்கையை ஏற்று எழுந்தருளியதால் மகிழ மரமும் தலவிருட் சங்களாகத் திகழ்கின்றன. ஒரே கோயிலில் இரண்டு தல விருட்சங்கள் கொண்ட அபூர்வமான ஆலயமாகும்.

திருக்கடவூரில் மார்க்கண்டேயர் காசியிலி ருந்து எடுத்து வந்த பிஞ்சாலம் எனும் மல்லிகை வகைக் கொடியே தலமரமாக வணங்கப்படுகிறது.

திருப்புனவாசலில் சதுரக்கள்ளி, குருந்து, மகிழம், புன்னை ஆகிய நான்கும் தலமரங்களாக போற்றப்பட்டு வணங்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் ஆலயத்தில் மருத மரம், மலைமல்லி, கொடிமல்லி, செடிமல்லி, அடுக்குமல்லி, மரமல்லி போன்ற ஆறும் தலமரங்களாகப் போற்றப்படுகின்றன.

திருநீலக்குடி மனோக்ஞயநாத சுவாமி ஆலயம் வன்னி, பலா, கூவிளம், நொச்சி, விளா, மாவிலங்கை ஆகிய ஆறும் தலவிருட்சமாகக் கொண்டு வணங்கப்பட்டு வருகிறது.

திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்தின் தலவிருட்சமாக மருதமரம் வணங்கப்படுகிறது.

கடலூரில் உள்ள பாடலீஸ்வரர் ஆலயத்தில் பாதிரி மரமே தலவிருட்சமாக உள்ளது.

வேதாரண்யத்தை அடுத்த கள்ளிமேட்டில் திருக்குக்கள்ளி, கொடிக்கள்ளி மரங்கள் தலவிருட் சங்களாக உள்ளன.

காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் ஆலயத்தில் முருக்கமரமே தலவிருட்சமாய் உள்ளது. கூர்மா வதாரம் எடுத்த திருமாலுக்கு இம்மரத்தின் கீழ் ஈசன் சுய உருவைக் காட்டியதாக ஐதீகம்.

சென்னைசைதாப்பேட்டை சௌந்தரீஸ்வரர் ஆலயத்தில் வன்னிமரம் தல விருட்சமாகத் திகழ் கிறது. சனி தோஷம் உள்ளவர்கள் இந்த மரத்தை வலம் வந்து தம் தோஷம் நீங்கப்பெறுகின்றனர்.

திருச்செங்காட்டங்குடி உத்ராபதீசுவரர் ஆலயத்தில் ஆத்திமரம் தலவிருட்சமாய் அருள்கிறது. பிள்ளைக்கறியமுது படைத்த சிறுத் தொண்டர் வாழ்ந்த தலம் இது.

சென்னை கோடம்பாக்கம் புலியூர் பாரத் வாஜேஸ்வரர் ஆலயத்தில் நாகலிங்க மரமே தலவிருட்சமாகத் திகழ்கிறது. பூவே சிவலிங்க வடிவில் காட்சியளிப்பது இம்மலரின் விசேஷம்.

நயினார்கோயில் நாகநாதர் ஆலயத்தில் மருத மரம் தலவிருட்சம். இதில் அநேக பாம்புகள் வசிக்கின்றன.

திருப்பெருந்துறையில் உள்ள ஆவுடையார் ஆலயத்தில் குருந்த மரமே தலவிருட்சம். இதனடியிலேயே மாணிக்கவாசகர் ஈசனிடம் உபதேசம் பெற்றார்.

திருவோத்தூரில் உள்ள வேதபுரீசுவரர் ஆல யத்தில் ஆண் பனைமரமே தலமரமாக உள்ளது. திருஞானசம்பந்தர் இந்த மரத்தை பூத் துக் காய்த்து பழம் பழுக்க வைத்தது வரலாறு.

சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத்தில் கொன்றை மரம், தலவிருட்சம். இந்த இடம் கொன்றையடி என வழங்கப்படுகிறது. இம்மரத் திற்கு பூஜை செய்த பின்பே தாணுமாலயனுக்கு பூஜைகள் நடைபெறுகின்றன.

திருவாவடுதுறையில் படர் அரசு தலவிருட்ச மாக உள்ளது. அதன் கீழமர்ந்தே திருமூலர் திருமந்திரத்தை அருளினார் என்பர். இம்மரத் தின் பெயராலேயே ஆதீனமும் அரசவனத்து அறநிலையம் என வழங்கப்படுகிறது.

திருமருகலுக்கு அருகிலுள்ள திருப் பயிற்றுநாதர் ஆலய தட்சிணாமூர்த்தி சந்நதியில் தலமரமாக சிலந்தி மரம் உள்ளது. இதன் பூக்கள் மஞ்சள் நிறத்தில் சிலந்திப்பூச்சியைப்போல் இருக்கும். சித்திரை, வைகாசியில் பூக்கும் இவை, மணமற்றவை.

அப்பர் சுவாமிகள் அவ தரித்த திருவாய்மூரில் அவர் நினைவிடத்தில் உள்ள ஆலமரம் களர் அகாய் என அழைக்கப்படுகிறது. இதன் இலைகள் பலவிதமான சுவை களோடு உள்ளது.

மும்மூர்த்தித் தலம் என கொண் டாடப்படும் பாண்டிக்கொடு முடியில் வன்னிமரம் தலவிருட்சம். இதன் அடியில் வீற்றருளும் நான்முகன் மூன்று முகங்களோடு அருள்கிறார். அவரது நான்காவது முகமாக வன்னி மரத்தை வழிபடுகின்றனர்.





### பல பிரச்சனைக்கு தீர்வாகும்

# பரிகார தீபம்

## ஏற்ற வேண்டிய வழிமுறைகள்

பல்வேறு பிரச்சனைகளில் உழன்று இருப்பவர்கள் ஜோதிடத்தை நாடுவது வழக்கமாக உள்ளது. அவ்வாறு ஜோதிடத்தை நாடும் போது ஒரு சில ஜோதிடர்கள், கோவிலுக்கு சென்று ஒருசில பரிகாரம் செய்யச் சொல்வார்கள்.

அவ்வாறு அவர்கள் சொல்லும் பரிகாரங்களை செய்வதற்கென்று சில நியதிகள், சூட்சுமங்கள் உள்ளன. ஆனால் அவற்றையெல்லாம் பெரும்பாலான ஜோதிடர்கள் வெளிப்படையாக ஜாதகர்களிடம் கூறுவதில்லை. இதனால் நியமங்கள் சூட்சுமங்களை கடைபிடிக்காமல் செய்யப்படும் பரிகாரங்களுக்கு எந்தவித பலனும் கிடைக்காமல் விரக்தி ஏற்படுவதுண்டு.

எந்தவிதப் பரிகாரம் செய்வதாக இருந்தாலும் நம் ஜாதகத்தில் பூர்வ புண்ணியஸ்தானமான 5ம் இடம் வலுவாக இருந்தால் மட்டுமே நாம் செய்த பரிகாரம் எடுபடும். இல்லையென்றால் நாம் செய்த பரிகாம் எடுபடாது. இதற்கு நாம் பெரும்பாலும் நம்முடைய ஜென்ம நட்சத்திரத்தில் பரிகாரம் செய்வது சிறப்பு. அதோடு மட்டுமல்லாமல் பரிகார தீபம் கீழ்கண்ட நேரங்களில் மட்டும் ஏற்றினால் நாம் செய்த பரிகாரம் எடுபடும்.

1. அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை உஷத்காலம் எனப்படும் இந்த நேரத்தில் தேவர்களின் உலகில் மகரிஷிகள் தேவ கங்கையில் நீராடி கங்கா தீர்த்தத்தினால் சூரிய பகவானுக்கு அர்க்கியம் விடும் நேரம். அந்த அர்க்கியத்தினால்தான் சூரியனுக்கு அளவற்ற தேஜஸ் (ஒளி) ஏற்படுகிறது. அவர் தேர் அதன் பாதையில் வலம் வருகிறது.

2. பிற்பகல் 12.15 மணி முதல் 2.30 மணிவரை பித்ருகாலம் எனப்படும். மறைந்த நம் பித்ருக்கள் (முன்னோர்கள்) இந்த நேரத்தில் தங்கள் திருவுள்ளத்தில் நன்மை நினைத்து தங்கள் தவ வலிமையினால் நம்மை ஆசிர்வதிக்கும் நேரமாகும்.

3. மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை பிரதோஷகாலம் எனப்படும். இந்த நேரத்தில் நாம் பரிகார தீபம் ஏற்றினால் மிகுந்த நன்மை தரும் என்று நமது புராதன நூல்கள் கூறுகின்றன.

மேற்கூறிய மூன்று காலத்திலும் நாம் செய்யும் புண்ணிய காரியங்கள் அனைத்தும் அதிக பலன்களை அளிக்கும். உதாரணமாக மேற்கூறிய நேரங்களில் ஒரு தீபம் ஏற்றி வைத்தால் பத்து தீபம் ஏற்றி வைத்த புண்ணியம் கிடைக்கும்.

ஒருவருக்கு மேற்கூறிய நேரத்தில் அன்னதானம் செய்தால் பத்து பேருக்கு அன்னதானம் அளித்த பலன் கிடைக்கும். அதே போன்று மேற் குறிப்பிட்ட நேரத்தில் ஒருவருக்கு வஸ்திர தானம் செய்தால் பத்து பேருக்கு வஸ்திரதானம் கொடுத்த பலன்கள் கிடைக்கும்.

பரிகாரம் என்பது அவ்வப்பொழுது கார் டியூப்பையும், சைக்கிள் மற்றும் பைக் பஞ்சர் பார்ப்பது போலத்தான். நிரந்தரமானது அல்ல. தர்மம் செய்தால் மட்டுமே கர்மம் போகும். இதுதான் உண்மை. சோத்துக்குள் இருக்கான் சொக்கப்பன் என்பது முதுமொழி.

எனவே மேற்கூறிய நேரத்தில் தீபம் ஏற்றி வ்ந்தால் நமக்கு எளிதில் அதிக பரிகாரங்கள் செய்த பலன் கிடைக்கும். ஆனால் அந்த நேரத்தில்தான் செய்ய வேண்டும் என்று கட்டாயம் இல்லை. இருந்தாலும் மேற்கண்ட நேரத்தின்படி செய்தால் புண்ணியத்தின் பலன் பல மடங்காகும் என்பது கண் கூடான உண்மை.

பகவானுக்கு தீபம் ஏற்றுவதன் மூலம் எல்லையற்ற சக்தியையும், அதனால் ஏற்படும் பரிகார பலன்கள் தாங்கள் நன்றாக உணருவீர்கள்.

வீட்டிலோ அல்லது திருக்கோயில் ஒன்றிலோ தீபம் ஏற்றுவதன் சூட்சுமம் மிகவும் ரகசியமானது. அது எவ்வாறு நமது பாவங்களினால் ஏற்படும் தோஷங்களையும் சாபங்களையும் அத் தோஷத்தினால் ஏற்படும் துன்பங்கள் பரிகார தீபம் மூலம் உடனடியாக நிவர்த்தி ஆகும் என்பதை நமது மகரிஷிகள் பல இரகசிய கிரந்தங்கள் மூலம் சொல்லியுள்ளனர். இதை பெரும்பாலான ஜோதிடர்கள மக்களுக்கு சொல்லாமல் மூடி மறைத்து விடுகிறார்கள். இதனால் மக்கள் பெரும்பாலானோர் துன்பத்தில் அவதிப்படுகின்றனர்.

நாம் எந்த பரிகாரம் செய்தாலும், பூரண பக்தியோடும், சிரத்தையோடும் மேலும் சரணாகதி தத்துவத்தில் நாம் பரிகாரம் செய்தால் மட்டுமே நாம் செய்த பரிகாரம் எடுபடும். இல்லையென்றால் நம் பரிகாரம் எடுபடாது. இறைவனுக்கு ஒரு பூ போட்டால் கூட அதை நாம் பக்தியோடும், சிரத்தையோடும் செய்தால் இறைவன் ஏற்றுக் கொள்வார். இல்லையென்றால் நாம் ஏனோதானோ பரிகாரம் செய்தால் பரிகாரம் எடுபடாது இதனால் வீண் மனக்குழப்பமும் வேதனையுமே மிஞ்சும்.

நாம் எந்த பரிகாரம் செய்தாலும் முடிவில் “அன்னதானம்” செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அந்த பரிகாரம் எடுபடும். இல்லையென்றால் எடுபடாது. உங்களால் முடிந்தவரை அன்னதானம் செய்ய வேண்டும். அதோடு குடிக்க தண்ணீர் மற்றும் தட்சனை சேர்த்து ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்யப்படும் அன்னதானம் பரிகார நேரத்தில் செய்தால் தோஷம், சாபம் போன்றவை நிவர்த்தி ஆகும். அதே போன்று பசுவிற்கு அகத்தி கீரை கொடுப்பதும் சிறப்பான பலனைத் தரும்.

ஸ்ரீ அம்பாள் உபாசகர்
சுதர்சன ஐயங்கார், திருச்சி 17
போன் 9840369513





# வேதங்கள் நான்கில் இருந்து பிறந்த ஐந்தாவது வேதமே

# பரதநாட்டியம்



அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாக கருதப்படும் பரதக்கலை, பாரத நாட்டின் தெய்வீகக் கலையாக போற்றப்படுகின்றது. காரணம் ஆரம்ப கால மக்கள் அதிக துயரத்தில் ஆழ்ந்து கிடந்தனர். இந்நிலை மாறி எங்கும் இன்பம் உண்டாகும் வண்ணம், அனைவரும் புரிந்து கொள்ளுமாறு நான்கு வேதங்களில் இருந்து ஒரு பொழுதுபோக்கை உருவாக்குமாறு இந்திரன் பிரம்மாவை வேண்டினார். இதற்கமைய இருக்கு வேதத்தில் இருந்து நாட்டியத்தையும், யஜூர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், சாம வேதத்திலிருந்து இசையையும், அதர்வ வேதத்திலிருந்து ரஸத்தினையும் தொகுத்து ஐந்தாம் வேதமாக நாட்டியக் கலையினை படைத்தார்.

பிரம்மா தான் படைத்த நாட்டியக்கலையை முதலில் பாரத முனிவருக்கு கற்பித்தார். இதனைப் பரதர் கந்தர்வர்கள், அப்சரஸ் பெண்களுக்கு கற்றுக் கொடுத்தார். பின்னர் கைலயங்கிரியில் சிவன் முன் னிலையில் இப்பெண்கள் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பவற்றை ஆடிக் காட்டினர்.இதனைக்கண்டுமகிழ்ந்தசிவன் தான் இயற்றிய நர்த்தனத்தை நினைவு கூர்ந்து தண்டு முனிவரை அழைத்து அதனை பரதருக்கு கற்று கொடுக்கும்படி கூறினார். தண்டு முனிவரால் எடுத்துச் சொல்லப்பட்டமையால் இது ‘தாண்டவம்‘ என பெயர் பெற்றது.

இந்த நடனத்தை ஆடுபவர்கள் மிகப்பெரும்பான்மையோர் பெண்களே யென்றாலும், ஆண்களும் இதனை ஆடுவதுண்டு. சைவ சமயத்தவர்களின் முழுமுதற் கடவுளான சிவன் கூட, நடராஜர் வடிவத்தில் இந்த நடனத்தை ஆடியபடி சித்தரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சிவபெருமான் ஆடும் நடனம் ‘தாண்டவம்‘ என்று சொல்லப்படுகிறது. மகிழ்ச்சியின் உச்சத்தில் அவர் ஆடும் நடனம் ‘ஆனந்த தாண்டவம்‘ என்றும், அழிக்கும் கடவுளாக அவர் ஆடும் நடனம் ‘ருத்ர தாண்டவம்‘ என்றும் அழைக்கப்படுகிறது. மென்மையான அசைவுகள் மற்றும் பதங்களுடன் பார்வதி ஆடும் நடனம் ‘லாஸ்யா’ என்று அழைக்கப்படுகிறது.

பார்வதி தேவி லாஸ்யம் என்னும் நடனத்தினை பாணனின் மகளும், அனுருத்திரனின் மனைவியுமாகிய உசைக்கு கற்றுக்கொடுத்தார். உசை இதனை துவாரகையிலுள்ள இடைச்சேரிப் பெண்களுக்குக் கற்பித்தார். பின் இவர்கள் மூலம் இக்கலை உலகெங்கும் பரவியது.

உடல் அசைவுகளும், கை முத்திரைகளையும் சேர்த்தது ‘அடவு’ என்று வழங்கப்படுகிறது. பல அடவுகள் சேர்ந்தது ‘ஜதி’ எனப்படும். அடவுகள் சுமார் 120 உள்ளன. அவற்றில் கிட்டத்தட்ட எண்பது வரைதான் தற்போது பயன்பாட்டில் உள்ளது. சிதம்பரம் மற்றும் மேலக்கடம்பூர் ஆலயத்தில் உள்ள சிற்பங்களில் இவை செதுக்கப்பட்டுள்ளன.

இத்தெய்வீகத் திருக்கலையினையே நாம் பல்வேறு நூல்கள், ஏடுகள், குறிப்புகள் என்பவற்றில் பரதம் என குறிப்பிட்டுள்ளதைக் காணக்கூடியதாக வுள்ளது. எனவே ‘பரதம்‘ என்னும் பதம் எவ்வடிப்படை மூலங்களைக் கொண்டு பின்னிப் பிணைந்துள்ளது என்பதனை அறிதல் பொருத்தமானதாகும்.

பரதக்கலையின் முக்கண்களாக திகழ்வன; பாவம், ராகம், தாளம் என்னும் கலைக்கூறுகளாகும். இம்மூன்று சொற்களிலும் முதல் எழுத்துக்களாக திகழ்வன ப,ர,த என்னும் எழுத்துக்களாகும். அதே மூன்று சொற்களிலும் இறுதி எழுத்தாக திகழ்வது “ம்“ என்னும் எழுத்தாகும். இதுவே இறுதியும், பொதுவானதுமான எழுத்தாகும். எனவே மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களையும், அதே மூன்று சொற்களின் இறுதி எழுத்தாகிய “ம்“ எனும் எழுத்தும் சேர்த்து ‘பரதம்‘ என்னும் பதம் புனையப்பட்டுள்ளது.



பழந்தமிழர் வரலாற்றுக் குறிப்புகளில் தமிழ் மக்கள் இயல், இசை, நாடகம் ஆகிய கலைகளில் சிறப்பிடம் பெற்று விளங்கினர் என்பதற்கான பல ஆதாரங்களை கலைகளில் இன்றும் நாம் காண்கிறோம். பல்வேறு காலங்களாகப் போற்றி பேணி மெருகூட்டி வளர்க்கப்பட்டு வந்த தெய்வீகத் திருக்கலையான நாட்டியக்கலையானது, பிற்காலத்தில் துரதிஷ்டவசமாக சமூக சீரழிவுகளுக்கு உட்படுத்தப்பட்டு, காலச்சக்கரத்தில் சிக்குண்டு, இழிவு நிலைக்கு தள்ளப்பட்டு, உதாசீனம் செய்யப்பட்டது, ஆனாலும் தெய்வங்களாலும், வேதத்தாலும் உருவாக் கப்பட்ட இக்கலையானது, தனிப் பட்ட தெய்வீகப்பலமும், தெய்வீக சக்தியும் இன்றுவரை அதனை நிலைகொள்ளச் செய்து விட்டது.



இன்றைய நாட்டியக்கலை ஆராய்ச்சிக்கு தென்னிந்திய கோயிற் சிற்பங்கள், அவற்றுக்கு கீழ் எழுதப்பட்ட சுலோகங்கள்,கோயிற் கோபுரங்கள், கோயில்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள், சில கோவிற் கல்வெட்டுக்கள் என்பன அதி முக்கிய பங்கினை வகிக்கின்றன. மேலும்

அடிப்படை உண்மைகளும், அதன் தெய்வீகக் கோட்பாடுகள் என்பனவும், குருகுலங்கள் மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் பாதுகாக் கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருகின்றதிலிருந்து இக்கலையின் உன்னதத் தன்மை விளங்கும்.

நாட்டிய சாஸ்திரம்: பரதமாமுனிவர் எழுதிய நூலுக்கு நாட்டிய சாஸ்திரம் என்று பெயர். இந்நூலில் பரதர் நாட்டியத்தைப்பற்றி மட்டும் கூறவில்லை. அரங்கம் அமைத்தல், இசை, இசைக்கருவிகள், அவற்றை வாசிக்கும் மரபுகள், சொல், கவிதை, கவிதையின் தன்மை, பல்வேறு சுவைகள், ஆடை அணிகலன்கள், முதலியவற்றையும் நாட்டியத்தில் பயன்படுத்தும் கரணங்கள், கால்சாரிகள், ஹஸ்தங்கள், உடல் வளைவுகள், அசைவுகள், கழுத்து அசைவுகள், முதலிய அனைத்தையும் விவரித்து அவற்றிற்கு இலக்கணம் வகுத்துள்ளதும் இந்நூலேயாகும்.



உலக மரபுகளைக்காட்டுவதை லோகதர்மி என்றும், நாட்டியத்திற்கெனத் தனித்தன்மை உடைய மரபுகளை நாட்டியதர்மி என்றும் பரதர் அழைக்கிறார். பரதர் எழுதிய நாட்டிய நூலுக்கு உரை எழுதியவர்களில் மிகச்சிறந்தவர் அபிநவகுப்தர் என்பவர், காஷ்மீர தேசத்தைச் சேர்ந்தவர், தமிழ் நாட்டில் தஞ்சைக்கோயிலைக் கட்டிய முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் வாழ்ந்தவர். அவர் இந்நூலை நாட்டிய வேதம் என்று கூறுகிறார்.

கி. பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந் தவர் சார்ங்கதேவர் என்ற பெரியார். அவர் சங்கீர ரத்னாகரம் என்ற நூலை சமஸ்கிருத மொழியில் எழுதியிருக்கிறார். அவரும் நாட்டிய நூலை நாட்டிய வேதம் என்ற பெயராலேயே அழைக்கிறார். அவரும் நார்த்தனம் என்பது நாட்டியம் என்று அழைக்கப்படுகிறது என்று கூறுகிறார். சார்ங்கதேவரின் நூலுக்கு ஸிம்ம பூபாலர் என்பவர் உரை எழிதியுள்ளார். அவர் நர்த்தனம் என்பது நாட்டியம், நிருத்தம், நிருத்தியம் என மூன்று பிரிவுகளை உடை யது. பாடலின் அர்த்தமானது சுவையை முக்கியமாகக்கொண்டு அபிநயிக்கப்படும் பொழுது நாட்டியம் எனப்படும். பாடலின் அர்த்தம் பாவகத்தை அடிப்படையாகக்கொண்டு அபிநயிக்கப்படும்போது நிருத்யம் எனப்படும். பாடலின் ராகத்துக்கு ஏற்ப உடல் அசைவகளோடு ஆடுதல் நிருத்தம் எனப்படும் என்று கூறுகிறார். மூன்றாவதாகக் கூறப்படும் நிருத்தம் என்பதில் பாடல் உண்டு, ஆனால் அதன் அர்த்தத்தைப் பற்றி கவனம் தேவையில்லை. அதன் ராக அசைவுகளுக்கு ஏற்ப அங்க அசைவுகள் இருக்கவேண்டும். அதாவது அபிநயம் இல்லாமல் நாட்டியம் மட்டும் புரிவதை நிருத்தம் என்பர். இவை மூன்றும் உட்பிரிவுகளே. மூன்றிலே இசையும் உண்டு, ஆடலும் உண்டு. ஆதலால் இதற்கு நாட்டியம் என்பது பொதுப்பெயர்.

பரத நாட்டியத்திற்கு பாடல், நட்டுவாங்கம் மற்றும் இசைக்கருவிகளின் துணை தேவை. வீணை, புல்லாங்குழல்,வயலின், மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகள் இவற்றில் சில. இசைக்கலைஞர்கள் மேடையின் ஒருபுறமாக அமர்ந்து இசைக்க, நடனம் ஆடுபவர் மேடையின் மையப்பகுதியில் ஆடுவார். நடனம் ஆடுபவர், நாட்டியத்திற்காக பிரத்யேகமாக தைக்கப்பட்ட வண்ணப் பட்டாடைகள் அணிந்து இருப்பார். மேலும் பரத நாட்டியத்திற்கான நகைகளையும், காலில் சலங்கையும் அணிந்திருப்பார்.

இந்நடனத்தை ஆடும் ஆண்களும், பெண்களும் இந்நடனத்தின் அசைவுகளை கையாளும் போது அவர்களின் உடலும் மனமும் சுத்தியடைவதாக கூறப்படுகிறது. மேலும் இந்நடனத்தின் அசைவுகள் தியானம், யோகா போன்றவற்றை தன்னுள் அடக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. இக்கலையை கற்றுத் தேர்ந்த வர்கள் தனிப்பட்ட எந்த உடற்பயிற்சியும் தேவையற்றதாகவும் உள்ளது.

தற்போதைய கால கட்டத்தில் கணியில் மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கு, ஐந்தாவது வேதமான பரதக்கலையை பயிற்றுவித்தால் அவர்களின் மனமும், உடல் நலமும் சிறப்பாக இருக்கும்.

– சிவசுப்பிரமணியன், பெங்களூரு





## திருமணத்தில் நடைபெறும்
# ஏழு அடி ரகசியம்

திருமணத்தில் மணமகனும், மணமகளும் ஒன் றாக சேர்ந்து அக்னிபகவானை சுற்றி ஏழு அடிகள் எடுத்து வைத்து நடப்பதை பார்த்திருப்போம், இந்த வழக்கத்தை சம்ஸ்கிருதத்தில் “சப்தபதி” என்று கூறுவார்கள். அதாவது ஏழு அடிகள் மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் சேர்ந்து நடந்து வருவதாகும்.

அவ்வாறு ஏழு அடிகள் நடக்கும் போது மாப்பிள்ளை பெண்ணிடம் இறைவன் உனக்கு துணையிருப்பான் என்று கீழ்கண்டவாறு தனது பிரார்த்தனையைச்சொல்கிறான் !

“முதல் அடியில்: பஞ்சமில்லாமல் வாழ வேண்டும்“

“இரண்டாம் அடியில்: ஆரோக்கிய மாக வாழ வேண்டும்“

“மூன்றாம் அடியில்: நற்காரியங்கள் எப்பொழுதும் நடக்க வேண்டும்“

“நான்காவது அடியில்: சுகத்தையும், செல்வத்தையும் அளிக்க வேண்டும்”

“ஐந்தாவது அடியில் : லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்து பெற வேண்டும்“

“ஆறாவது அடியில்: நாட்டில் நல்ல பருவங் கள்நிலையாக தொடர வேண்டும்“

“ஏழாவது அடியில்: தர்மங்கள் நிலைக்க வேண்டும்“

என்று பிராப்திப்பதாக சொல்லப்படுகிறது. இந்த சம்பிரதாயத்தில்மனிதர்களிடம் இருக்கும் மிகவும் சூக்ஷமமான மனோ வியல்விசயத்தை இந்து தர்மத்தில் உணர்த் தியுள்ளார்கள் நம் முன்னோர்கள். இரண்டு நபர்கள் ஒன்றாக ஏழு அடிகள் நடந்தால் அவர்களுக்குள் சினேகிதம்உண்டாகும் என்பது சாஸ்திரம். உதாரணமாக நாம் சாலையில் நடக்கும் போது அறிமுக மில்லாத ஒருவரை கடக்கும் போது சில விநாடிகள் ஒன்றாய் நடக்க நேர்ந்தால் நன்றாக கவனியுங்கள். ஏழு அடிகள் நடப்பதற்குள் நாம் அவர்களை வேகமாக தாண்டிவிடுவோம் அல்லது அவர்களைமுன்னே போகவிட்டுவிடுவோம்.முழுமையாக ஏழு அடிகள் ஒன்றாக நடக்க மாட்டோம்.

இரண்டு மனிதர்கள் ஒன்றாக நடக்கும் போது அவர்களுக்குள் நடக்கும் மனோவியல் மாற்றங்கள் ஏழு அடிகளுக்குளாக நடந்து விடும் என்பது ஒரு சூக்ஷமமான விஷயம்.

இதை மிகவும் நுணுக்கமாக ஆரய்ந்து நம் இந்து தர்மத்தில் அதை ஒரு சம்பிரதாயமாக வைத்திருப்பதை நாம் அனுபவித்து உணர வேண்டும். இந்து தர்மத்தில் எதுவும் மூடநம்பிக்கை இல்லை. பல நுணுக்கமான அறிவியல் மற்றும் மனோவியல்விஷயங்கள் நிறைந்தது இந்து தர்மம்.





# லட்சுமி கடாட்சத்தை அருளும் "ஸ்ரீராமஜெயம்" மகிமை

சிலர் ஸ்ரீராமஜெயத்தை லட்சம் முறை, கோடி முறை என எழுதுகின்றனர். வேலை கிடைத்தல், திருமணம், வீடு கட்டுதல் போன்ற உலக இன்பங்கள் கருதி வேண்டுதல்களுக்காக இதை எழுதுகின்றனர். உலக இன்பங்கள் மட்டுமின்றி, இந்த மந்திரம் அகப்பை எனப்படும் நமக்குள்ளேயே இருக்கும் கெட்ட குணங்களையும், புறப்பகை எனப்படும் வெளியில் இருந்து நம்மைத் தாக்கும் குணங்களையும் வெல்லும் சக்தியைத் தரும். "ராம" என்ற மந்திரத்திற்கு பல பொருள்கள் உண்டு. இதை வால்மீகி முனிவர் "மரா" என்றே முதலில் உச்சரித்தார். "மரா" என்றாலும், "ராம" என்றாலும் பாவங்களைப் போக்கடிப்பது என்று பொருள்.



ராமனுக்குள் சீதை அடக்கம். அதனால் அவரது பெயரையே தனதாக்கிக் கொண்டாள். "ரமா" என்று ஒரு பெயர் சீதைக்கு உண்டு. "ரமா" என்றால் "லட்சுமி". லட்சுமி கடாட்சத்தை வழங்குவது "ராம" மந்திரம். ராம மந்திரம் எழுதுவோருக்கும், சொல்வோருக்கும் எங்கும் எதிலும் ஜெயம் (வெற்றி) உண்டாகும். ராமன் என்ற பெயரின் அர்த்தம், "ரா" என்றால் "இல்லை" "மன்" என்றால் " தலைவன்" "இது போன்ற தலைவன் இதுவரை இல்லை" என்பது இதன் பொருள்.

# கும்பாபிஷேகம்

திருச்சி மாவட்டம், திருச்சி தாலுகா, முதலியார் சத்திரத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில், 11.11.2016 (வெள்ளிக்கிழமை) புணராவர்த்தன ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்தையொட்டி 09.11.2016 புதன்கிழமை ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்திலிருந்து தீர்த்தம் எடுத்து வருதல் மற்றுமு மகா கணபதி ஹோமம், புண்யாஹவாசனம், வாஸ்த்து சாந்தி, மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

மேலும் 10.11.2016 காலை 9 மணிக்கு விக்னேஷ்வர பூஜை துவங்கி பல்வேறு பூஜைகள் நடைபெற்று மாலை 6 மணிக்கு தீபாராதனை நடைபெறும்.

11.11.2016 காலை 7 மணிக்கு கோ பூஜை துவங்கி 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். இரவு அம்மன் குதிரை வாகனத்தில் வீதி உலா வருதல் நிகழ்ச்சி நடைபெறும்.

இதன் தொடர்ச்சியாக 13.11.2016 திருக்கோயிலிலுள்ள அனைத்து தெய்வங்களுக்கும் சந்தனகாப்பி நிகழ்ச்சி நடைபெறும். மேலும் 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

இவ்விழாவில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்மனின் அருளாசியினை பெறுமாறு விழாக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கே.சுப்பிரமணியகுருக்கள் 98656 05018

எஸ்.கிருஷ்ணகுமார் 9043998535





விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
உலகின் முதல் மெயில் புத்தகமாக வெளிவரும் நமது மாதமிருமுறை இதழுக்கு விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
முழு பக்க விளம்பரம் ரூ.5,000
அரைப்பக்க விளம்பரம் ரூ.2,500
விளம்பர ஏஜெண்ட்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்
மேலும் விபரங்களுக்கு
8939499598 9677159070 7299992699
நிர்வாக அலுவலகம் aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024
தவறாமல் படியுங்கள்
www.aanmeegamalar.com

# மொட்டை

## மருத்துவ உண்மையும் சாஸ்திர விளக்கமும்



நம் நாட்டில் நிறைய பழக்கவழக்கங்கள் காரணம் தெரியாமலேயே மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் அப்படி பின்பற்றப்படும் பழக்கவழக்கங்களுக்கு பின்னணியில் நிச்சயம் ஓர் உண்மை மறைந்திருக்கும்.

அவற்றில் தலையாய ஒன்றாக கருதப்படுவது "மொட்டை போடுதல்", இந்த செயலை மக்கள் இன்று வரை காரணம் தெரியாமல் கடைபிடித்து வருகின்றனர்.

முறையாக சொன்னால் யாரும் பின்பற்றமாட்டார்கள் என்று நம் முன்னோர்கள் அதை சாங்கியம் சம்பிர தாயத்திற்குள் மறைத்து வைத்துள்ளனர். இதனால், பல்வேறு செயல்களில் மொட்டை போடுதல் என்ற செயலும் ஒன்றாகவே கருதப்படுகிறது.

பலரும் இது ஓர் குடும்ப வழக்கம், நேர்த்திக்கடன் என்று நினைத்து பின்பற்றி வருகிறார்கள். ஆனால் இதற்கு பின்னணியில் உள்ள உண்மையான காரணம் என்னவென்று யாருக்காவது தெரியுமா? தெரியாதெனில், உங்களது எண்ணத்தை மாற்றி, இனிமேலாவது உண்மையான காரணத்தைத் தெரிந்து கொண்டு பின்பற்றுங்கள்.

குழந்தைக்கு மொட்டை போடுவது என்பது, மருத்துவ ரீதியாக அலசி ஆராயப்பட்டுள்ள ஒன்றாகும். அதன்படி குழந்தை பிறக்கும் முன் தாயின் கருவறையில் இருக்கும் போது. தாயின் வயிற்றில் இரத்தம், சிறுநீர், மலம் போன்றவை நிறைந்த சூழலில் 10 மாதங்கள் குழந்தை வளரும், அக்குழந்தை பிறந்தவுடன் சுத்தம் செய்யப்படும். ஆனால் குழந் தையின் தலையில் சேரும் கழிவுகள் தலைமுடி, கால்கள் வழியாகத் தான் வெளியேற முடியும். ஆனால் அதற்கான வழிகள் குறைவு. அதற்காகத் தான் குழந்தை பிறந்த சில மாதங்களுக்குள் மொட்டைப் போடுகின்றனர்.

ஒருவேளை அப்படி மொட்டை போடா விட்டால், அக்கழிவுகள் தலையில் அப்படியே தங்கி, பிற்காலத்தில் அதுவே பல நோய்கள் வருவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும்.

இதுபோன்ற உண்மை காரணத்தைச் சொன்னால், பலரும் அலட்சியப்படுத்தி பின்பற்ற மாட்டார்கள். எனவே தான் நேர்த்திக்கடன் என்ற பெயரில் நம் முன்னோர்களால் அது பரப்பப்பட்டது.

ஒருசில குழந்தைகளுக்கு முடி வளர்ச்சியில் சிறிய குறைபாடுகள் இருக்கும் அதை நிவர்த்தி செய்யவே இரண்டு மூன்று முறை குழந்தைகளுக்கு மொட்டை அடிப்பார்கள்.

பெரும்பாலும் பிறந்த குழந்தைகளுக்கு ஒற்றைப் படை எண் வரும் மாதங்களான 5, 7, 9, 11 போன்ற மாதங்களில் "மொட்டை" அடிப்பது இந்து மத வழக்கம்.

அதே சமயம் வயதில் பெரிய வர்களும் மொட்டை அடித்துக் கொள்வதற்கு சாஸ்திரப்படி பல்வேறு காரணங்கள் உண்டு. நன்கு வளர்ந்த மற்றும் வயதில் முதிர்ச்சிக் கண்டவர்கள் மொட்டை போடுவதற்கு மருத் துவ காரணம் மட்டுமல்ல சாஸ்திர காரணங்களும் உண்டு.

அதாவது ஜாதகம், ராசி, பலன்கள் போன்றவற்றை கணிக்கும் போது ஒருவருடைய ஜாதகத்தில் பல்வேறு சிக்கல் இருந்தால், அவர்களும் இறைவனுக்கு வேண்டிக் கொண்டு மொட்டை போடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

ஒரு சிலர், தங்கள் தொழில் சிறக்கவும் மொட்டை போடுவார்கள். தொழில் நன்றாக முன் னேறினால் திருப்பதி, பழனி போன்ற ஏதாவது ஒரு தலத்தில் வந்து மொட்டைப் போடுவதாக வேண்டிக் கொள்வார்கள். இதற்கும் பல்வேறு காரண காரியங்கள் உண்டு. இவ்வாறு மொட் டை போடுபவர்களுக்கு, தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போவதைப் போன்று மறைந்து விடும் என்றும் பெரியவர்கள் கூறுவார்கள்.

அதாவது, மகாபாரதப் போரின் உச்சகட்ட போரின் முடிவு நாளான 18ம் நாள் இரவு நேரத்தில், பாண்டவர்கள் ஐவரின் குழந்தை களும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர்.

அந்த வேளையில், அவர்களின் உறக்கத்தை மீளா உறக்கமாக மாற்ற எண்ணி அறையின் உள்ளே புகுந்த குரு துரோணாச்சாரியாரின் மகனான அஸ்வத்தாமன், உறக்கத்திலிருந்த குழந்தைகளை பாண்டவர்கள் என்று எண்ணி வெட்டி சாய்த்தான்.

கண நேரத்தில் நடைபெற்ற இந்த சம்பவத்தால் அக்குழந்தைகள் படுக்கையறையிலேயே பிணமாக மாறினர்.

விடிந்ததும் அங்கு வந்த பாண்டவர்கள் நடந்த கொடுமையை எண்ணி மனம் கலங்கினார்கள்.

இந்த மாபாதக செயலை செய்தவனை சிரம் கொய்வேன் என்று சபதமிட்டான் அர்ஜுனன்.

அதன்படி குற்றவாளி யார் என்று கண் டறியப்பட்டு விலங்கிட்டு கொண்டு வந்து பாண்டவர்கள் முன் நிறுத்தப்பட்டான் அஸ்வத்தாமன். ஆனால் தனது குருவான துரோணாச்சாரியாரின் மகனான அஸ்வத் தாமனை கொன்றால் பாபம் வரும் என திரௌபதியும், மற்றவர்களும் கூற, என் சபதம் முடிக்காமல் விடமாட்டேன் என கர்ஜித்தான் அர்ஜுனன்.



அப்போது அங்கு வந்த ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு உபாயம் சொல் கின்றார்.

"அர்ஜுனா, உன் கோபமும் செயலும் நியாயமானதே, ஆனாலும் தர்மத்தின் பாதையில் செல்லும் நீ புரிந்து கொள், அவனை சிரம் கொய்யாதே, பதிலாக சிகையை மழித்துவிடு, அது அவன் மரணித்ததற்கு ஒப்பாகும்" என்றார்.

கிருஷ்ணரின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு, குழந்தைகளைக் கொன்ற அஸ்வத்தாமனின் முடி மழிக்கப்பட்டு துரத்தப்பட்டான்.

இந்த சம்பவத்திற்குப் பின்பு, மிகப் பெரிய தோஷம், குடும்பத்தில் மிகுந்த துயரம் போன்ற கெடுதலான பலன்கள் நம்மை தாக்கக் கூடாது என்பதற்காகவும், அதன் வீரியத்தை குறைக்கும் நோக்கத்திற்காகவும், இறைவன் குடிகொண்டுள்ள கோயில்கள் மற்றும் குல தெய்வக் கோயில் போன்றவற்றில், தங்களையே பலியிடுவதாக கருதி, நமது முன்னோர் தலைமுடியை மழித்துக் கொண்டு தீய பலன்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர். இதுவே பிற்காலத்தில் "மொட்டை" போடுதல் என்று உருமாறியது.



# அற்புத மருத்துவக் குணம் கொண்ட வாழைப் பூ



பூக்கள் என்றால் வாசனைக்கு மட்டும் தான் என நினைக்கத்தோன்றும். ஆனால் அதில் மருத்துவப் பயன்கள் நிறைந்திருப்பதை யாரும் முழுமையாக அறிந்திருக்க மாட்டோம். பூக்களின் மருத்துவக் குணங்களைக் கொண்டு பல நோய்களைக் குணப்படுத்தியுள்ளனர் சித்தர்கள். தற்போது மலர் மருத்துவமாகவே மேல் நாடுகளில் சிகிச்சை செய்து வருகின்றனர்.

பூக்களில் நாம் பலவற்றை அறிந்திருப்போம். அவற்றில் வாழைப்பூவைப் பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது. வாழையை இந்தியாவில் வீட்டு மரமாக வளர்க்கின்றனர். வாழைமரத்தில் மொத்தம் 14 வகைகள் உள்ளன.

முன்னோர்கள் பொதுவாக வாழையை பெண் தெய்வமாகவே வணங்கி வந்தனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த வாழையின் அனைத்துப் பாகங்களுமே மருத்துவப் பயன் கொண்டவை. இதில் வாழைப் பூவின் மருத்துவக் குணங்களை அறிந்து கொள்வோம்.

மருத்துவப் பயன்கள்:

## இரத்தத்தைச் சுத்தப்படுத்த:

வாழைப்பூவை வாரம் இருமுறை சமைத்து உண்டு வந்தால் இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து வெளியேற்றும். இதனால் இரத்தத்தின் பசைத்தன்மை குறைந்து, இரத்தம் வேகமாகச் செல்லும்.

மேலும் இரத்த நாளங்களில் ஒட்டியுள்ள கொழுப்புகளைக் கரைத்து இரத்தத்தை சுத்தப்படுத்தும். இதனால் இரத்தமானது அதிகமான ஆக்ஸிஜனை உட் இரப்பதுடன், தேவையான இரும்பு சத்தையும் உட்கிரகிப்பதுடன். இரத்த அழுத்தம், இரத்த சோகை போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.

## சர்க்கரை நோயாளிகளுக்கு:

இரத்தத்தில் கலந்துள்ள அதிகளவு சர்க்கரைப் பொருளைக் கரைத்து வெளியேற்ற வாழைப்பூவின் துவர்ப்புத்தன்மை அதிகம் உதவுகிறது. இதனால் இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையின் அளவு குறைகிறது.

## வயிற்றுப்புண் நீங்க:

இன்றைய உணவுமுறை மாறுபாட்டாலும், மன உளைச்சலாலும் வயிற்றில் செரியாமை உண்டாகி அதனால் அபான வாயு சீற்றம் கொண்டு வயிற்றில் புண்களை ஏற்படுத்துகிறது. இந்த புண்களை ஆற்ற வாழைப் பூவை வாரம் இருமுறை உணவில் சேர்த்து வந்தால் வயிற்றுப் புண்கள் ஆறும். செரிமானத்தன்மை அதிகரிக்கும்.

## மூலநோயாளிகளுக்கு:

மூலநோயின் பாதிப்பினால் மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், உள்மூலம், வெளிமூலப் புண்கள் இவற்றுக்கு சிறந்த மருந்தாக வாழைப் பூவைப் பயன்படுத்தலாம். வாழைப்பூ மூலக்கடுப்பு, இரத்த மூலம் போன்றவற்றைக் குணப்படுத்தும்.

மலச்சிக்கலைப் போக்கும் . சீதபேதியையும் கட்டுப்படுத்தும். வாய்ப் புண்ணைப் போக்கி வாய் நாற்றத்தையும் நீக்கும்.

## பெண்களுக்கு:

பெண்களுக்கு உண்டாகும் கருப்பைக் கோளாறுகள். மாதவிலக்கு காலங்களில் அதிக இரத்தப்போக்கு, அல்லது இரத்த போக்கின்மை, வெள்ளைப்படுதல் போன்ற நோய்களுக்கு வாழைப்பூவை உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால் நோய்கள் நீங்கும்.

## வாழைப்பூ கஷாயம்

வாழைப்பூ (இரண்டு அல்லது மூன்று இதழ்களை நீக்கி விட்டு பூவை சிறிது சிறிதாக நறுக்கி வைத்துக் கொண்டு) அதனுடன்

இஞ்சி 5 கிராம்

பூண்டு பல் 5

நல்ல மிளகு 1 ஸ்பூன்

சீரகம் 1 ஸ்பூன்

சோம்பு 1 ஸ்பூன்

கொத்தமல்லி விதை 1 ஸ்பூன்

கறிவேப்பிலை 5 இணுக்கு

எடுத்து இடித்து கஷாயம் செய்து காலை, மாலை என இருவேளையும் மாதவிலக்கு தோன்றும் காலத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பும், மாதவிலக்கு காலங்களிலும், மாதவிலக்கு முடிந்து இரண்டு நாட்கள் என மூன்று அல்லது நான்கு மாதங்கள் அருந்தி வந்தால் கருப்பைப்புண், கர்ப்பப்பைக் கட்டி, வெள்ளைபடுதல், மாதவிலக்கு சீரற்ற தன்மை போன்றவை மாறும். இது கை கண்ட மருந்தாகும். அடிவயிறு கனம் குறையும். புண்புரை நீங்கும், சீராக இரத்த ஓட்டம் பெறும். உடல் வலுவடையும்.

பெண்களுக்கு உண்டாகும் சூடு மற்றும் வெள்ளை படுதலை போக்கும். கர்ப்பப்பையை வலுப்படுத்தும் குணமுண்டு. மலட்டுத் தன்மையைப் போக்கும். ஈறு வீக்கம், புண் இவற்றிற்கு சிறந்த மருந்தாகும். வியர்வை நாற்றத்தைப் போக்கி, வியர்வையை நன்கு வெளியேற்றும்.

கை, கால்களில் உண்டாகும் பித்த எரிச்சலைக் குணப்படுத்தும். உடல் எரிச்சலைப் போக்கும். தாதுவை விருத்தி செய்து விந்துவை கெட்டிப்படுத்தும். பருவ வயதினருக்கு உண்டாகும் சொப்ன ஸ்கலிதத்தை மாற்றும்.

நரம்புகளுக்கு வலுவூட்டும். குறிப்பாக மூளை நரம்புகளில் சூட்டைத் தணித்து மூளைக்கு புத்துணர்வைக் கொடுக்கும்.

இத்தகைய சிறப்பு மிகுந்த வாழைப்பூவை நாமும் சமைத்து உண்டு நோயில்லா பெருவாழ்வு வாழ்வோம்...



# நட்டத்திரத்திற்குரிய சித்தர் வழிபாடு

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு நட்சத்திரம் இருக்கும். இவ்வாறு உள்ள நட்சத்திரங்களுடன் தொடர்புடைய சில செயல்களை செய்யும் போது, மனித வாழ்வு மேன்மையடையவும். ஒருசில கர்மாக்கள் விலகிப் போகவும் நல்ல வாய்ப்பாக அமையும். இந்த நட்சத்திரத்திற்குரிய வழிபாட்டு முறைகள் பல இருக்கிறது. அதில் ஒன்றுதான் சித்தர் வழிபாடு.

சித்தர்கள் எந்த திதியில் பிறந்தார் கள் என்பதை வரலாறு சரியாக அனைவருக்கும் குறிப்பிடவில்லை. ஆனால் நட்சத் திரங்களையும் பிறந்த தமிழ் மாதங்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். அதன்படி எந்த நட்சத்திரத்தில் சித்தர்கள் பிறந்தார்கள் அவர்கள் ஜீவ சமாதி எங்குள்ளது. என்பவ ற்றை எளிதாக நமது ஆன்மிகமலர்.காம் இதழ் தெளிவுபடுத்துகிறது. படித்து பயன் பெறுங்கள். நீங்கள் தெரிந்து கொண்டதை தெரியாத அன்பர்களுக்கு கூறுங்கள்.

**அசுவினி** நட்சத்திரத்திற்குரிய சித்தர் காளங்கிநாதர் ஆவார். இவர் சமாதி மற்றும் சக்தி அலைகள் கஞ்சமலை மற்றும் திருக்கடையூர் ஆகிய தலங்களில் உள்ளது.

**பரணி** நட்சத்திரத்திற்குரிய சித்தர் போகர் ஆவார். இவர் பழனி முருகன் சன்னதியில் சமாதி உள்ளது.

**கிருத்திகை** நட்சத்திரத்திற்குரிய சித்தர் ரோமரிஷி ஆவார். இவருக்கு சமாதி இல்லை. இவர் உடல் அழியவும் இல்லை. நேரே கைலாயத் திற்கு சென்றுவிட்டார் என வரலாறு கூறுகிறது. இவரை திங்கள்கிழமை வெள்ளை ஆடை அணிந்து வடக்கு நோக்கி திருக்கயிலை இருப்பதாக பாவித்து வணங்க வேண்டும்.

**ரோகிணி** நட்சத்திரத்திற்குரிய சித்தர் மச்சமுனி ஆவார். இவர் ஜீவ சமாதி திருப்பரங்குன்றத்தில் உள்ளது.

**மிருகசீரிடம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் பாம்பாட்டி சித்தர் ஜீவ சமாதி சங்கரன் கோயில் என்ற ஊரில் உள்ளது. இதே நட்சத்திரத்திற்குரிய இன்னொருவர் சட்டமுனி சித்தராவார். ஊர் திருவரங்கம் ஆகும்.

**திருவாதிரை** நட்சத்திரத்திற்குரிய சித்தர் இடைக்காடர் ஜீவ சமாதி திருவண்ணாமலையில் உள்ளது.

**புனர்பூச** நட்சத்திரத்திற்குரிய சித்தர் தன்வந்தரி ஆவார். இவர் வைதீஸ்வரன் கோவிலில் ஜீவ சமாதி ஆனவர்.

பூசம் நட்சத்திரத்திற்குரிய சித்தர் கமல முனி ஆவார். இவர் திருவாரூரில் ஜீவ சமாதி உள்ளது.

**ஆயில்யம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் அகத்தியர். இவர் ஒளிவட்டம் குற்றால பொதிகைமலையில் உள்ளது. சமாதி கேரள தலைநகரம் திருவனந்தபுரத்தில் உள்ளது.


மகான் அகத்தியர்


மகான் கருவூரார்


மகான் திருமூலர்


மகான் சுந்தரானந்தர்


மகான் பாம்பாட்டி சித்தர்


மகான் சட்டைநாதர்


மகான் இராமதேவர்

**மகம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் சிவ வாக்கிய சித்தர் ஆவார். இவர் ஜீவ சமாதி கும்பகோணத்தில் உள்ளது.

**பூரம்** நட்சத்திரம் என்பது சக்தியின் அருளைப் பெற்ற நட்சத்திரமாகும். இந்த நட்சத்திரத்தில் அவதரித்த தெய்வ பெண்மணி ஸ்ரீ ஆண்டாள் ஆவார். இவர் பூமாதேவி அம்சமாக உள்ளார். இவரை வணங்க ஏற்ற இடம் ஸ்ரீவில்லிபுத்தூர் மட்டுமே. ஏனெனில் இவர் தோன்றிய இடமே அங்குதான். அடுத்து ராமதேவ சித்தரும் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்தான். இவர் மாற்று பெயர் யாகோப்பு என்றும் உள்ளது. இவர் ஜீவசமாதி அரபு நாடான மெக்காவில் உள்ளது. இவர் ஒளி வந்துபோகும் இடம் அழகர் மலையாகும். இவரை வழிபட நம் நாட்டினர் அழகர் மலைக்குத்தான் செல்கிறார்கள்.

**உத்திரம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் காகபுஜண்டர் ஆவார். இவர் ஜீவசமாதி திருச்சி உறையூரில் உள்ளது.

**அஸ்தம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் கருவூரார் ஆவார். இவர் சமாதி கரூரில் உள்ளது. அடுத்து இவர் ஒளிவட்டம் வந்து செல்லும் இடம் தஞ்சாவூர் பெரிய கோயில் ஆகும்.

**சித்திரை** நட்சத்திரத்திற்குரிய சித்தர் புண்ணாக்கீசர் ஆவார். நண்ணாசேர் என்ற இடத்தில் இவர் ஜீவ சமாதி உள்ளது.

**சுவாதி** நட்சத்திரத்திற்குரிய சித்தர் புலிப்பாணி ஆவார். சமாதி பழனி அருகில் வைகாவூர் என்ற இடத்தில் உள்ளது.

**விசாகம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் நந்தீசர் மற்றும் குதம்பை சித்தர் ஆவார். நந்தீசர் காசி நகரத்திலும் (பனாரஸ்), குதம்பை சித்தர் மாயவரத்திலும் ஜீவசமாதி உள்ளது.

**அ னு ஷ ம்** நட்சத்திரத்திற்குரிய


மகான் அழுகண்ணர்


மகான் கோரக்கர்


மகான் மச்சமுனி


மகான் கமலமுனி


மகான் புண்ணாக்கீசர்


மகான் இடைக்காடர்


மகான் குதம்பை சித்தர்


மகான் தேரையர்


மகான் புலிப்பாணி


மகான் காலங்கி



சித்தர் வால்மீகி அல்லது வான்மீகர் என்று அழைக்கப்படுபவராவார். இவர் எட்டுக்குடியில் ஜீவசமாதி உள்ளது.

**கேட்டை** நட்சத்திரத்திற்குரிய சித்தர் பகவான் வியாசர் ஆவார். இவர் உடல் அழிவற்றது. எனவே காற்றோடு காற்றாக கலந்து இருப்பார். இவரை நினைத்தாலே போதும். அவ்விடம் வருவார்.

**மூலம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் பதஞ்சலி ஆவார். இவர் சமாதி ராமேஷ்வரத்தில் உள்ளது.

**பூராடம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் பூரம் நட்சத்திரத்திற்கு சொல்லப்பட்ட ராமதேவர் எனும் யாகோப்பு சித்தரே ஆவார். அழகர்மலை மற்றும் மெக்காவில் ஜீவ ஒளி உள்ளது.

**உத்திராடம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் கொங்கணர். இவர் ஜீவசமாதி திருப்பதி ஆகும்.

**திருவோணம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் ஆவார். இவர் சமாதி பாண்டிச்சேரி அடுத்து உள்ள பள்ளித்தென்னல் என்ற இடத்தில் உள்ளது.

**அவிட்டம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் திருமூலர் ஆவார். இவர் சிதம்பரத்தில் ஜீவசமாதி உள்ளது.

**சதயம்** நட்சத்திரத்திற்குரிய சித்தர் கௌபாலர் ஆவார். இவரின் சமாதி இங்குதான் என வரலாறு தெளிவாக குறிக்கவில்லை. எனினும் மன ஒழுக்கத்தோடு இவரை நினைத்தாலே தேடிவந்து அருள்புரிவார் எனக் குறிப்பு உள்ளது.

**பூராட்டாதி** நட்சத்திரத்திற்குரிய சித்தர் சோதிமுனி ஆவார். இவர் ஜோதி வடிவிலே ஜீவனாக உள்ளவர். அதனால் இவருக்கு தீபம் ஏற்றி வழிபட்டால் அங்கு அருள்பாலிப்பார். தனித்து சமாதி என்று குறிப்பிடும்படியாக தெரிவிக்கவில்லை.

**உத்திரட்டாதி** நட்சத்திரத்திற்குரிய சித்தர் டமரகர் ஆவார். இவரும் நேரிடையாக காற்றில் ஐக்கியமாகி கலந்துவிட்டதென வரலாறு கூறுகிறது. இவரை சிவாலயத்தில் ஒலிக்கும் இசை வாத்தியங்களில் ஏழாம் ஓசையில் ஒலியாக வந்து இறைவனுக்கு இசை முழக்கத்தால் சேவை செய்வார் எனக் குறிப்பிடுகிறார்கள். இவரை வீட்டிலேயே சிறுமணி ஓசையில் வரவழைத்து அவர் அங்கு வந்ததாக பாவித்து வணங்கலாம்.

**ரேவதி** நட்சத்திரத்திற்குரிய சித்தர் சுந்தரானந்தர் ஆவார். இவர் ஜீவசமாதி மதுரையில் உள்ளது.

மேற்குறிப்பிட்ட நட்சத்திரத்திற்குரியவர்கள் அதற்குரிய சித்தர்களை தொடர்ந்து வழிபடுவதுடன், கால நேரம் கிடைக்கும்போது நேரிடையாக சித்தர்களின் ஜீவசமாதிக்கு சென்று வழிபட்டால் சித்தர்களின் ஆசியுடன் சகல சங்கடங்களும் தீரும்.

– சித்தாசர், கோவை







# மரணப்படுக்கையில் நீர் கொடுக்க காரணம்?

குருசேத்திரப் போர் நடந்து கொண்டிருந்தது. பிஷ்மரின் தந்தை சந்தனு மகனுக்கு ஒரு வரமளித்தார். 'எப்பொழுது பீஷ்மர் மரணமடைய விரும்புகிறாரோ அப்போது மரணமடைவார்' என்பதே அது. பத்தாம் நாள் போர் அன்று, பீஷ்மர் பாண்டவர் படைக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தினார். அப்போது அவருக்குத் தான் செய்யும் செயலில் சலிப்பு ஏற்பட்டது. உடன் தான் இறக்க நினைத்தார்.

அவரின் நிலையை அறிந்த அர்ச்சுனன் தேரின் முன்னால் சிகண்டியை நிறுத்தி விட்டு பீஷ்மர் மேல் அம்பெய்தினான். சிகண்டி முன் போர் புரிய விரும்பாத பீஷ்மர் அமைதி யாயிருந்தார். அர்ச்சுனனின் அம்புகள் அவரது உடலைத் துளைத்தன. உத்திராயண காலத்தில் இறக்க விரும்பிய பீஷ்மர் அம்புப் படுக்கையில் இருந்தார்.

அவரைத் தரிசிக்கவும் ஆசி பெறவும் பல அரசர்களும் வீரர்களும் வந்தனர். உடலில் காயங்களுடன் படுத்த படுக்கையாக இருந்த பீஷ்மர் மிகவும் களைப்படைந்தார். தாகம் ஏற்படவே அருந்தத் தண்ணீர் கேட்டார். துரியோதனனும் கர்ணனும் நறுமணம் மிக்க இனிய பானங்களைக் கொண்டு வந்தும் அதை அருந்தவில்லை.

அர்ச்சுனனை நோக்கி, 'சாஸ்திரங்கள் கூறும் வழியில் எனக்கு தண்ணீர் தருவாயாக' என்றார். அர்ச்சுனன் தன் காண்டீபத்தை நாணேற்றி பீஷ்மரின் தலைக்கருகே ஏவினான். உடனே பூமி பிளந்து பீஷ்மரின் தாயான கங்கை நீர் ஊற்றாகப் புறப்பட்டு நேராக பீஷ்மரின் வாயின் அருகில் பாய்ந்தது. பீஷ்மரும் அதைப் பருகித் தாகம் தணிந்தார்.

மங்காத புகழ் பெற்ற பீஷ்மருக்கு மரணப் படுக்கையில் ஏற்பட்ட தாகம், கங்கையான அவ எது தாயால் தணிந்து புண்ணியலோகத்தை அடைந்தார். இதனால்தான் இன்றும் மரணப் படுக்கையில் இருப்பவருக்குக் கங்கை நீர் கொடுத்து அதனால் அவர்கள் புண்ணிய லோகம் அடைய வேண்டி இப் பழக்கம் கடை பிடிக்கப்பட்டது. கங்கை தீர்த்தம் கிடைக்காதவர்கள் கோவி லில் தீர்த்தம் அல்லது துளசி கலந்த நீரை கொடுக்கலாம்.



## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:

**ஆசிரியர்: நாகராஜன்**

16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்

பொன்மணிமாளிகை அருகில்,

சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா

தொலைபேசி 7299992699/ 8939499598








## பிரச்சனைகளை தீர்த்துவைக்கும்
# பரிக்கல் லஷ்மி நரசிம்மர்

விழுப்புரம் – உளுந்தூர்ப்போட்டைக்கு இடையே சுமார் முன்று கிலோ மீட்டர் தொலைவில் பரிக்கல் என்ற ஊர் இருக்கிறது. அங்கு சிறிய, அழகான நவீனமான லஷ்மி நரசிம்மர் திருக்கோயில் உள்ளது.

மாத்துவ தலைவர் வியாசராஜரால் அக்கோயில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அமர்ந்த கோலத்தில் லஷ்மி நரசிம்மர் உள்ளார். வேறு எல்லா இடத்திலும் நரசிம்மரின் உக்கிரம் கண்டு அவர்மீது சாய்ந்து லஷ்மிதேவி கைகூப்பி இருப்பார்.

இந்த ஒரு இடத்தில் மட்டும் நரசிம்மர் மீது எவ்வித பயமுமின்றி புன்னகையோடு, சீற்றம் மிகுந்த நரசிம்மரை தழுவிக் கொண்டிருக்கிறார். அவருடைய வலது கை லஷ்மி நரசிம்மரின் முதுகுப்பக்கமாக அரவணைத்த கோலத்தில் இருக்கிறார்.

இத் திருக்கோயிலை வலம் வந்து வணங்கி "எனக்கு வெற்றி கொடு" என்று வேண்டிக் கொண்டால் போதும், அனைத்திலும் வெற்றி கிடைக்கும். திருமணமாக வேண்டும் என்று வேண்டிக் கொண்டால் திருமணம் நடைபெறும். தொழில், வியாபாரம், கல்வி போன்றவற்றில் வெற்றி பெற வேண்டும் என்றால் இந் நரசிம்மர் திருக்கோயிலுக்கு வந்து வேண்டிக் கொண்டால் வெற்றி நிச்சயம்.

இத்திருக்கோயிலின் இன்னுமொறு சிறப்பு என்னவெனில், பக்த ஆஞ்சநேயரும், வீர ஆஞ்சநேயரும், அருகருகே தனிச் சன்னதியில் அருள்பாலிக்கின்றனர்.

ஒரு மேடையில் சிறிய தடுப்பு போட்டு அவரை மிக அண்மையில் நின்று பார்க்கும்படியாக செய்திருக்கிறார்கள்.

சிலை இருக்கும் பீடத்தில் நவதானியங்களைக் கொட்டி, என் குறை இது என்று அந்த நவதானியத்தில் எழுதினால் போதும். ஆஞ்சநேயர் மனம் குளிர்ந்து மிக வேகமாக, வேண்டுபவரின் பிரச்சனையை தீர்த்துவைத்துவிடுகிறார். இவ்விதம் செய்து பயனடைந்தோர் பலர்.

பரிக்கல் ஒரு சிறிய கிராமம் என்பதால் பூஜைக்கு தேவையான அனைத்து பொருட்களை முன்கூட்டியே வாங்கிக் கொண்டு செல்வது உசிதம்.

குழந்தைகளின் கல்வி, திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெற, பணி, வியாபாரம், தொழில் போன்றவற்றில் உள்ள அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்கும் திருத்தலமாக லஷ்மி நரசிம்மர் திருக்கோயில் திகழ்வதால், மேற்கண்ட பிரச்சனையால் அவதிப்படுபவர்களுக்கு இத்தலத்தைப் பற்றி எடுத்துக் கூறி அவர்களும் பிரச்சனையிலிருந்து விடுபட்டு நல்ல பலனைப்பெற உதவுங்கள்.

ஏ.ஜி.ரவி, திருநெல்வேலி
தொ.பே.எண்.9750719085

# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத் தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்

www.aanmeegamalar.com






வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

**ஆன்மிகமலர் டிரஸ்ட்**

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033


www.aanmeegamalar.com

# சாமியே சரணம் ஐயப்பா

# 2017ல் சபரிமலை நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்



சபரிமலை: வரும், 2017ம் ஆண்டு சபரி மலையில் நடை திறந்து, அடைக்கும் நாட்கள் பற்றிய விபரங்களை திருவிதாங்கூர் தேவசம்போர்டு வெளியிட்டுள்ளது. மொத்தம், 137 நாட்கள் நடை திறந்திருக்கும்.



ஜனவரி: மகரவிளக்கு கால பூஜைக்காக, 2016 டிச., 30 மாலை நடை திறக்கும்; 2017 ஜன., 20 காலை, 7:00 மணிக்கு நடை அடைக்கப்படும். ஜன., 14ல் மகரவிளக்கு பெருவிழா.

பிப்ரவரி: மாசி மாத பூஜை களுக்காக, பிப்., 12 மாலை திறப்பு; 17 இரவு அடைப்பு

மார்ச்: பங்குனி மாத பூஜைகளுக்காக, மார்ச், 14 மாலை திறப்பு; 19 இரவு அடைப்பு. பங்குனி உத்திர திருவிழாவுக்காக மார்ச், 30 மாலை திறப்பு; மார்ச், 31 காலை கொடியேற்று.

ஏப்ரல்: பங்குனி உத்திர திருவிழா ஆராட்டு முடிந்து, ஏப்., 9ம் தேதி இரவு நடை அடைப்பு. சித்திரை மாத பூஜை மற்றும் விஷூ விழாவுக்காக, ஏப்., 10 மாலை திறப்பு; ஏப்., 18 இரவு அடைப்பு. விஷூ கனி தரிசனம், ஏப்., 14ல் நடைபெறும்.

மே: வைகாசி மாத பூஜைகளுக்காக, மே, 14 மாலை திறப்பு; மே, 19 இரவு அடைப்பு.

ஜூன்: பிரதிஷ்டை தின பூஜைகளுக்காக, ஜூன், 3ம் தேதி மாலை திறப்பு; 4ம் தேதி இரவு அடைப்பு. ஆனி மாத பூஜை களுக்காக, ஜூன், 14 மாலை திறப்பு; 19 இரவு அடைப்பு.

ஜூலை: ஆடி மாத பூஜை களுக்காக,ஜூலை, 16 மாலை திறப்பு; 21 இரவு அடைப்பு.

ஆகஸ்ட்: ஆவணி மாத பூஜை களுக்காக, ஜூலை, 16 மாலை திறப்பு; 21 இரவு அடைப்பு.



செப்டம்பர்: திருவோண பூஜைகளுக்காக, செப்., 2ம் தேதி மாலை திறப்பு, 6ம் தேதி இரவு அடைப்பு. புரட்டாசி மாத பூஜைகளுக்காக, செப்., 16 மாலை திறப்பு; 21 இரவு அடைப்பு.

அக்டோபர்: ஐப்பசி மாத பூஜைகளுக்காக அக்., 16 மாலை திறப்பு; 21 இரவு அடைப்பு சித்திரை ஆட்ட திருநாள் பூஜை அக்.,18ல் நடைபெறும்.

நவம்பர்: மண்ட கால பூஜைகளுக்காக நவ., 15 மாலை நடை திறப்பு.

டிசம்பர்: நவ.,15ல் திறக்கும் நடை டிச., 26 இரவு நடை அடைப்பு. டிச., 26 மண்டலபூஜை. 2018 மகரவிளக்கு கால பூஜைகளுக்காக டிச.,30 மாலை திறப்பு. வரும், 2017ல் மொத்தம், 137 நாட்கள் நடை திறந்திருக்கும். இதில் 123 நாட்கள் காலை முதல் இரவு வரையிலும் திறந்திருக்கும். 13 நாட்கள் அதாவது நடை திறக்கும் நாட்களில் மாலை, 5:00 மணி முதல், இரவு, 10:00மணி வரை நடை திறந்திருக்கும். அன்று பூஜைகள் எதுவும் கிடையாது.

அதுபோல ஜன., 2ம் தேதி அதிகாலை, 5:00 மணிக்கு திறக்கும் நடை, காலை, 7:00 மணிக்கு பந்தளம் மன்னர் பிரதிநிதி முன்னிலையில் அடைக்கப்படும். வரும், 2018 ஜன.,14 மகரவிளக்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1000 அஸ்வமேத யாகம் செய்த பலன்தரும் துளசி மாலை

சபரிமலைக்கு சென்று ஐயப்பனை தரிசிக்க செல்லும் பக்தர்கள் ருத்ராட்ச மாலையும், துளசி மாலையும் அணிந்து விரதமிருந்து செல்வார்கள். சிவனும் பெருமாளும் இணைந்து ஒரு மாபெரும் சக்தியாக உருவானவர் ஐயப்பன். இதில் ருத்ராட்சம் என்பது சிவனின் சின்னமாகும். துளசி என்பது பெருமாளுக்கு மிகவும் பிடித்தமானது. இது தவிர, துளசியின் கதையில் துளசியிடம் மஹாலட்சுமி வாசம் செய்கிறாள். ஆகையால் மலைக்குப் போகும் பக்தர்களுக்கு ஐஸ்வர்யம், சுபீட்சம் கிடைக்கும் என நம்பிக்கையும் உண்டு.

கார்த்திகை மாதத்தில் தொடங்கி, தை மாதம் வரை குளிர் இருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். இந்தத் துளசிக்கு உஷ்ணம் கொடுக்கும் தன்மை உண்டு. சளி, ஜலதோஷம் என்றால் துளசி கஷாயம் சாப்பிடுவது வழக்கம். ஐயப்ப பக்தர்கள், உடலில் வெப்பம் கொடுக்கத்தான் இந்தத் துளசி மாலையை அணிகின்றனர்.

கண்ணன் துளசி மாலை அணிந்திருப்பான். விஷத்தை முறித்து, உடலுக்கு வெப்பத்தை தரும் சக்தி துளசிக்கு உண்டு. கண்ணன் நாகங்களுடன் விளையாடுபவன். ஐந்து தலை நாகத்தின் மீதேறி நடனம் ஆடியவன். குளிர்ந்த மேனியன். எனவே தான், கண்ணன் துளசி மாலை அணிந்து கொள்வான்.

துளசி மாலை அணிந்தோ, துளசி மாலையை கையில் பிடித்தோ பூஜிப்பவர்களுக்கு, 1000 அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கு

## ஐந்துவிதமான பலனை தரும்

# பஞ்சமுக ஆஞ்சநேயர்

ஒரு முறை ராமருக்கும், ராவணனுக்கும் போர் நடந்தது. இதில் ராவணன் நிராயுதபாணியானான். இதனால் ராமர் ராவணனை கொல்ல மனமின்றி,"இன்று போய் நாளை வா' என திருப்பி அனுப்பிவிட்டார். ராமர் இவ்வாறு செய்தது தன்னை திருத்துவதற்குத்தான் என்பதை ராவணன் உணரவில்லை. மீண்டும் ராமருடன் போர் செய்ய நினைத்த ராவணன், "மயில் ராவணன்' என்ற மற்றொரு அசுரனது துணையுடன் போருக்கு கிளம்பினான். ராமரை அழிப்பதற்காக மயில் ராவணன் கொடிய யாகத்தை நடத்த திட்டமிட்டான்.

இந்த யாகம் நடந்தால் ராமலட்சுமணனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்த விபீஷணன், யாகத்தை தடுத்து நிறுத்த ஆஞ்சநேயரை அனுப்பும்படி ராமரிடம் கூறினான். ராமர் கூறியதன் பேரில் ஆஞ் சநேயர் யாகத்தை தடுத்து நிறுத்த கிளம்பும் முன் நரசிம்மர், ஹயக்கிரீவர், வராகர், கருடன், ஆகியோரை வணங்கி ஆசி பெற்றார்.இந்த தெய்வங்கள் அனைவரும் போரில் அனுமன் வெற்றிபெற தங்களின் உருவ வடிவின் சக்தியை அனுமனுக்கு அளித்தனர்.

இதன்மூலம் ஆஞ்சநேயர் பஞ்சமுகம் கொண்டு விஸ்வரூபம் எடுத்து மனித குல வாழ்விற்காக மயில் ராவணனை அழித்தார்.

இப்படி பஞ்ச முகத்தில் விசேஷ அவதாரம் எடுத்த தால், பக்தர்களின் தீர்க்க முடியாத குறைகளை தீர்த்து வைக்கும் அருளாற்றல் கொண்டவராக "பஞ்சமுக ஆஞ்சநேயர்' விளங்குகிறார். அத்துடன் வெற்றியையும் வளத்தையும் குறிக்கும் வகையில் "ஜய மங்களா' என்றும் அழைக்கப்படுகிறார்.

பஞ்சமுக ஆஞ்சநேயரை வழிபடுபவர்களுக்கு நரசிம்மரின் அருளால் எடுத்த காரியங்களில் வெற்றியும், லட்சுமி கடாட்சமும், ஹயக்கிரீவரின் அருளால் உண்மை யான அறிவாற்றல், ஆன்மிக பலமும், வராகரின் அருளால் மனத்துணிவும், கருடனின் அருளால் அனைத்து விதமான நஞ்சின் ஆபத்து விலகும் தன்மையும், ஆஞ்சநேயரின் அருளால் மன அமைதியும், சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.



தோஷம் நீக்கும் பஞ்சமுக ஆஞ்சநேயர் அனைத்து கோரிக்கைகளையும் ஈடேற்றக்கூடிய வல்லமை படைத்தவர் பஞ்சமுக ஆஞ்சநேயர். இவரது முகங்களான கருடமுகம் பிணி நீக்கும், வராகமுகம் செல்வம் அளிக்கும், அனுமன் முகம் சகல கிரகதோஷமும் போக்கி எல்லா நலமும் தரும், நரசிம்மமுகம் தீமையைப் போக்கும், ஹயக்ரீவர் முகம் கல்வியும், ஞானமும் தரும். பக்தர்கள் வேண்டியதை வேண்டியவாறு அருள்கிறார் பஞ்சமுக ஆஞ்சநேயர். இவரது தாடை நீண்டு இருக்கும். முகம், நரசிம்ம முகம், கருடன் முகம், வராஹ முகம், அனுமன் முகம், ஹயக்கிரீவர் முகம் என ஆஞ்சநேயர் ஐந்து முகவடிவில் ஒருங்கிணைந்து உள்ளார்.

கிழக்கு முகம் ஹனுமனாக சத்ருக்களை அழிக்க வந்த முகம் "பிரதிவாதி முகஸ்நம்பி'' என்ற சுலோக வரியினால் அனுமனை வேண்டினால் எதிரிகள் விலகுவர் என பொருள் தரும். தெற்கு முகம் நரசிம்ம முகம். இம்முக ரூப ஆஞ்சனேயர் பயத்தினால் உண்டாகும் பிரச்சனைகள், பில்லி சூன்யம் துஷ்ட தேவதைகளால் உண்டாகும் பரயந்த்ர பரமந்த்ர தோஷங்களை போக்க அவதரித்த முகம். மேற்கு முகம் கருடன் முகத் தரிசனம் சரும நோய், விஷ நோய், ஊழ்வினை நோய்களை போக்கி அருள்தரும்.

வடக்கு முகம் வராஹமுகத் தரிசனம், தீராத கடன், பொருள் இழப்பு விஷ சுரம், மர்ம நோய்கள் முதலியனவற்றை அழித்து சாந்தியும், நிம்மதியும் தரவல்லது. பொருளாதார மேன்மை உண்டாகும். மேல் முகம் ஸ்ரீஹயக்கிரீவர் முகம். இம்முக ஆஞ்சநேயர் சகல கலைகளையும், சிறந்த ஞானத்தையும், சொல்வன்மையையும், சகல கலா வல்லவனாக தேர்ச்சியையும் தருபவர். அனுமனை பஞ்சமுக ஆஞ்ச நேயராக வழிபாடு செய்யும் போது உங்களுக்கும் சொல்வன்மை, ஆரோக்கியம், எதிரிகள் விலகல் என அனைத்தும் உண்டாகும்.

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# உபதேசம் பெற்ற திருத்தலங்கள்

1. ஓமாம்புலியூர் தட்சிணாமூர்த்தி உமா தேவிக்கு பிரணவப்பொருள் உபதேசித்தது.

2. உத்திரகோசமங்கை பார்வதிக்கு இறைவன் வேதா கமலங்களின் இரகசியங்களை உபதேசித்தல்.

3. இன்னம்பர் அகத்தியர் வழிபாட்டு இலக்கண உபதேசம் பெற்றது.

4. திருவுசாத்தானம் இராமர் சேது அணை கட்டுவதற்கு இத்தலத்து இறைவனிடம் மந்திர உபதேசம் ராமர் பெற்றார்.

5. ஆலங்குடி சுந்தரர் தட்சிணாமூர்த்தியை வழிபட்டு பஞ்சாட்சர உப தேசம் பெற்றார். மற்றும் ஆதிசங்கரர் குருபகவானை தரிசித்து மகா வாக்கிய உபதேசம் பெற்றார்.



6. திருவான்மியூர் அகத்தியருக்கு மூலிகை {வைத்தியம்} பற்றி உபதேசம் அருளியது.

7. திருவாவடுதுறை அரிக்கும் அந்தணர் களுக்கும் சிவஞான உபதேசம் செய்தல், மற்றும் போகர் முதலிய நவகோடி சித்தர்களுக்கு அஷ்டமா சித்தி அருளியது.

8. சிதம்பரம் பைரவர் பிரம்ம தத்துவத்தை உபதேசித்தல்.

9. திருப்பூவாளியூர் நுன்முனிவர் 70 பேருக்கு பரஞான உபதேசம்.

10. திருமங்களம் சௌமினி முனிவர்க்கு சாமவேதம் உபதேசம்.

11. திருக்கழு குன்றம் சனகர் முதலிய முனிவர்க்கு சாமவேதம் உபதேசம்.

12. திருமயிலை 1000 முனிவர்கள் அறநெறிகளை அறிவுறையாக பெற்றது.

13. செய்யாறு வேதம் பற்றி கருப்பொருள் பற்றி தவசிகள் பலருக்கு அருளுரை.

14. திருவெண்காடு நான்முகன் குருமூர்த் தியிடம் ஞானோயதேசம் பெற்றது, அம்பாள் பிரம்மனுக்கு பிரம்ம வித்தையை உபதேசித்ததால் பிரம வித்யாம்பிகை என்று பெயர்.

15. திருப்பனந்தாள் அம்பாள் ஸ்வாமியிடம் ஞானோபதேசம் பெற்றது.

16. திருக்கடவூர் பிரம்மன் ஞானோபதேசம் பெற்றது.

17. திருவானைக்கா அம்பிகை ஞானோபதேசம் பெற்றது.

18. மயிலாடுதுறை குருபகவானிடம் நந்தி உபதேசம் பெற்றது.

19. திருவாவடுதுறை அகத்தியமுனிவர்க்கு பஞ்சாட்சரம் உபதேசம்.

20. தென்மருதூர் 1000 முனிவர்க்கு உபதேசம் அருளியது.

21. விருத்தாசலம் இறப்பவர்க்கு இறைவன் அவ்வுயிரை தன் தொடை மீது கிடத்தி மந்திர உப தேசம் மற்றும் இறைவி தன் முந்தானையால் விசிறி விடுதல்.

22. திருப்பெருந்துறை மாணிக்கவாசகருக்கு குருத்த மரத்தடியில் உப தேசம்.

23. உத்தரமாயூரம் ஸ்ரீ மேதா தட்சிணா மூர்த்தி ரிஷபதேவரின் கர்வம் அடக்கி உபதேசம் செய்தது.

24. காஞ்சி ஸப்தரிஷிகளுக்கு உபதேசம்.

25. திருப்புறம்பயம் சனகாதி முனிவர்களுக்கு தர்மோபதேசம்.

26. விளநகர் அருள் வித்தன் என்னும் மறையவருக்கு ஞானோபதேசம்.

27. திருத்துருத்தி சிவன் பிரம்மசாரியாய் வேதத்தை தாமே சொன்னது.

28. கரூர் ஈசன் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் மந்திரத்தை சுக்கிரனுக்கு உபதேசித்தல்.

29. திருவோத்தூர் ஈசன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தை உபதேசித்தல்.





## மற்றவர்களும் பயன்பெற

# அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 6,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

**aanmeegamalar@gmail.com**

**whatsapp: 7299992699**

www.aanmeegamalar.com



# முற்பிறவி நினைவு ஏன் வருவதில்லை?

சுவாமி விவேகானந்தர்

நாம் குழந்தைகளாக இருந்தபோது என்ன நடந்தது என்பது நம்மில் எத்தனை பேருக்கு நினைவில் இருக்கிறது.

நினைவு தான் ஆதாரம் என்றால் நம் நினைவில் இல்லாத நாட்கள் நாம் வாழாத நாட்கள் என்று ஆகிவிடும்.

சிலருக்கு நோய்காரணமாகவோ வேறு சில காரணங்களாலோ முற்றிலும் நினைவு இல்லாமல் இருப்பதை காணலாம், சிலருக்கு சில வருடங்களில் நடந்தவை மட்டும் நினைவில் இருப்பதில்லை. அவர்கள் நினைவில் இல்லாத காலங்கள் அவர் வாழாத காலம் என்று சொல்ல முடியுமா?

முற்பிறவியில் உள்ள மூளை அழிந்து விட்டது. இப்போது உள்ளது புதிய மூளை. ஒருவன் புதிய மூளையுடன் தான் மறுபிறவி எடுக்கிறான். ஆனாலும் சிலருக்கு முற்பிறவி நினைவு வருகிறது. இதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

எந்த பிறவியில் ஒருவன் முக்தனாக ஆவானோ அந்த பிறவியில் ஒருவனுக்கு முற்பிறவி நியாபகம் வருகிறது.

அறிவை வளர்த்துக்கொள்வதில் மனிதர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை இந்த மறுபிறவி கோட்பாடே விளக்கமுடியும்.

அறிவை அனுபவத்தின் மூலம் மட்டுமே பெற முடியும். பழைய அறிவுடன் புதிய அறிவை பொருத்திப்பார்ப்பதன் மூலமே புது அறிவு ஏற்படுகிறது. இந்த பிறவியில் அந்த அறிவை பெற்றிருக்காவிட்டால் வேறு பிறவியில் அதை அனுபவத்தின் மூலம் பெற்றிருக் வேண்டும். அறிவே இல்லாமல் ஒருவன் பிறந்தால் புதிதாக எந்த அறிவும் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஒப்பீடு மூலமே புது அறிவு உருவாகிறது. கோழியால் அடைகாக்கப்பட்ட வாத்துக்குஞ்சு தண்ணீரைக்கண்டவுடன் அதில் குதித்து நீந்துகிறது. இதை எவ்வாறு விளக்குவீர்கள்?இயற்கை என்று நீங்கள் பதிலளித்தால் உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை என்பது அர்த்தம்.

உடல் அழியும் போது ஆன்மாவிற்கு வழி காட்டுவது எது? அது முதலிலிருந்து செய்த செயல்கள், நினைத்த எண்ணங்கள் ஆகியவற்றின் மொத்த பலனே. இந்த பலன் மனம் இன்னும் அனுபவம் பெறுவதற்க்காக புதிய உடலை எடுக்கும் அளவுக்கு இருந்தால், அந்த உடலுக்கு தேவையான மூலப்பொருளை தருவதற்கு தேயாராக இருக் கும் பெற்றோர்களை நாடிச்செல்கிறது. இவ்வாறு அது ஓர் உடலை விட்டு இன்னோர் உடலுக்கு தாவுகிறது. சில வேளைகளில் மிருக உடலை எடுக்கிறது. தான் யார் என்னும் உண்மை நிலையை அறியும் வரை இவ்வாறு மறுபடிமறுபடி பிறந்து இறக்க வேண்டியுள்ளது.

கடவுள்மீது பழியைப்போட்டு தண்டிப்பவ ராகவோ பரிசளிப்பவராகவோ அவரை உருவகப் படுத்துவதற்கான நமது முயற்சியெல்லாம் வீண். நாம் எப்படி இருக்க வேண்டுமோ அது நம் கையில் தான் உள்ளது. நான் அனுபவிக்கும் இந்த துன்பத்திற்கு நானே தான் காரணம்.உங்கள் எதிர்காலத்தை உருவாக்கு வதற்கான ஆற்றல் உங்களிடமே உள்ளது.விதி என்கிறார்களே அந்த விதி என்பது என்ன?நாம் விதித்ததைத்தான் நாம் அறுக்கிறோம். நம் விதிக்கு நாமே காரணம். நாம் துன்பப்படுவதற்கு நாமே காரணம்.

சூன்யத்திலிருந்து எதையும் படைக்க முடியாது. மனிதன் சூன்யத்திலிருந்து படைக்கப்படான் என நினைப்பது அறிவற்ற செயல்.சூன்யத்திலிருந்து படைக்கப்ட்ட மனிதன் என்றென்றும் நிலையாக வாழ்வான் என நினைப்பது அறியாமை. நாம் எப்போதும் இருக்கிறோம்.

மனிதன் என்பவன் முதலில் வெளிப் போர் வையாக உடல், அதன் பின்னால் சூட்சும உடல் இவற்றால் ஆக்கப்படவன் என்பதைக் காண் கிறோம். இவற்றிற்குப் பின்னால் தான் மனிதனின் உண்மையான ஆன்மா உள்ளது.து□ல உடலின் சக்தி சூட்சும உடலிலிருந்து பெறப் படுகிறது. சூட்சும உடல் அதன் சக்தியை ஆன்மாவிலிருந்து பெறுகிறது. ஆன்மா படைக்கப்பட்டதல்ல.அது சுய ஒளி உடையது.ஆன்மா இல்லாத காலமே இல்லை.ஆன்மாவுக்கு பிறப்பு இறப்பு இல்லை.

பரம்பரைக்கருத்தை நாம் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்கிறோம் உடலை எடுப்பதற்கு தேவையான மூலப்பொருட்களை தங்கள் பெற்றோரிடமிருந்தே ஒருவன் பெறுகிறான்.பெற்றோர்கள் உடலுக்கு தேவையானவற்றை மட்டுமே கொடுக்கிறார்கள்.

நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும் செய்யும் ஒவ்வொர் செயலும் மனத்தில் துட்பமான உருவங்களாக பதிகிறது.இதை சம்ஸ்காரம் என்கிறார்கள்.நான் இறக்கும் போது இந்த சம்ஸ்காரத்தின் பலனே அடுத்தபிறவி எடுப்பதற்கு காரணமாக அமைகிறது.

வேதாந்திகளின் கருத்து படி, இந்த உடல் விழுந்த பின்னர் மனிதனின் உயிர் சக்திகள் மனத்திற்கு திரும்பிப்போகின்றன. மனம் பிராணனில் ஒடுங்குகிறது. பிராணன் ஆன்மாவில் ஒடுங்குகிறது. சூட்சும சீரத்தை உடைய ஆன்மா உடலை விட்டு வெளியேறுகிறது.இநத சூட்சும சரீரத்தில்தான் மனிதனின் சம்ஸ்காரங்கள் அனைத்தும் இருக்கின்றன கடவுள் ஏன் இந்தப்பிரபஞ்சத்தை படைத் தார்?முழுமையானர்,தேவையற்றவர் குறைவுடைய இந்த உலகத்தை ஏன் படைத்தார்?இந்த கேள் விக்கு ஒருபோதும் பதிலளிக்க முடியாது. ஏனெனில் இத்தகைய கேள்விகள் நியாயமற்றவை. மனத்தையும் உடலையும் கடந்து இருக்கும் இறை வனை அறிய வேண்டுமானால் மனத்தை கடந்து செல்ல வேண்டும். அப்போது தான் இதற்கான விடை கிடைக்கும்.

இந்த பிரபஞ்சத்தை இறைவன் திட்டமிட்டே படைத்தார். இயற்கையில் காணப்படும் ஒழுங்கு முறையே இதற்கு சான்று என்றெல்லாம் பேசுவது குழந்தைபேச்சு. குழந்தைகளுக்கு இவ்வாறு போதிக்கலாம், அதற்குமேல் இதனால் பயன் இல்லை.கடவுளுக்கு உள்ள படைப்பு சக்தியை இயற்கை காட்டுகிறது என்றால். அதற்கு திட்டமிடுவது அவருடைய பலவீனத்தை காட்டுகிறது. அவர் எல்லாம் வல்லவராக இருந்தால் அவருக்கு எந்த திட்டமிடுதலும் தேவையில்லை. எனவே இயற்கையில் இறைவனின் திட்டமிடுதல் எதுவும் இல்லை.எங்கும் நிறைந்த இறைவன் எதையும் அடைவதற்காகவோ மனிதர்களை சோதிப்பதற்காகவோ படைத்தார் என்ற பேச்சிற்கே இடமில்லை. படைப்பு மனிதனின் தேவைக்காக தானே தவிர இறைவனின் தேவைக்காக அல்ல.

உலகின் ஆரம்பம், மனிதனின் ஆரம்பம் என்றெல்லாம் மக்கள் பேசுகிறார்கள்.ஆரம்பம் என் பதற்கு யுகத்தின் ஆரம்பம் என்றுதான் பொருள். படைப்பிற்கு ஓர் ஆரம்பம் இருப்பது இயலாத காரியம். ஆரம்பகாலம் என்ற ஒன்றை நீங்கள் யாரும் கற்பனை செய்ய முடியாது. ஆரம்பம் உள்ள எதற்கும் முடிவு இருந்தேயாக வேண்டும். ஆன்மாவுக்கு ஆரம்பம் இல்லை. அதேபோல் முடிவும் இல்லை.

மதம் என்பது கொள்கைளிலோ கோட்பாடு களிலோ இல்லை. நீங்கள் எதை படிக்கிறீர்கள். எதை நம்புகிறீர்கள் என்பது முக்கியமல்,நீங்கள் எதை அனுபவத்தில் அறிகிறீர்களோ அது தான் முக்கியம். முதல் உயிரணுவிலிருந்து(ஒருசெல் உயிரி) பரிபூரண நிலை அடைந்த மனிதன் வரை யில் உண்மையில் ஒரே உயிர்தான் இருக்கிறது.

பரிணாமம் என்பது சூன்யத்திலிருந்து வருவதில்லை. அப்படியானால் அது எங்கிருந்து வந்தது?அதற்கு முந்தைய ஒடுக்கத்திலிருந்து தான். இந்த பிரபஞ்சம் முழுவதும் சூன்யத்திலிருந்து வெளிவந்திருக்க முடியாது.காரணம் இல்லாமல் காரியம் இல்லை.காரணம் காரியத்தின் வேறு உருவம்.இந்த பிரபஞ்சம் எதிலிருந்து தோன்றியது. அது இதற்கு முன்பாக இருந்த நுட்பமான ஒடுங்கியிருந்த பிரபஞ்சத்திலிருந்து தோன்றியது.

(ஞானதீபம் புத்தகம் 4–ல்)

தொகுத்து வழங்கியவர் – ஷ்யாம்சுந்தர்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# நோய் தீர்க்கும் சண்முக கவசம்



முருகப்பெருமானைத் தவிர வேறு யாரையும் வணங்குவதில்லை என்ற கொள்கையோடு முருகன் மீது 6666 பாடல்கள் பாடியவர் பாம்பன் சுவாமிகள். இவர் இயற்றிய சண்முக கவசம் புகழ்பெற்ற நூலாகும். கந்த சஷ்டி கவசம் போல இது பயமும், நோயும் தீர்க்கும் மருந்து என்றால் மிகையில்லை.

பாம்பன் சுவாமிகள், சென்னை தம்புச்செட்டித் தெருவில் செல்லும்போது எதிர்பாராமல் குதிரைவண்டி மோதியதில் இடக்காலில் முறிவு ஏற்பட்டது. 73 வயதில் நேர்ந்த இந்த விபத்தால் இனி சுவாமிகளால் நடக்க முடியாது என்று மருத்துவர்கள் சொல்லி விட்டனர்.

சுவாமிகள் மீது அன்பு கொண்ட சில பக்தர்கள், அவர் அருகே அமர்ந்து சண்முக கவசத்தை விடாமல் நம்பிக்கையோடு பாராயணம் செய்து வந்த னர். “சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க” என்னும் அடியைப் பாடியபோது சுவாமிகளின் கால்கள் குணமானது. அப்போது வானத்தில் இரு மயில்கள் தோகை விரித்து ஆடிய காட்சியை சுவாமிகள் கண்டார். தமிழிலுள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டையும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டையும் முதலெழுத்தாகக் கொண்டு 30 பாடல்களுடன் பாடப்பட்டது சண்முக கவசம். தினமும் ஆறுமுறை சண்முக கவசத்தை பாடுபவர்கள் எத்தகைய நோயில் இருந்தும் விடுபடுவர் என்பது நம்பிக்கை. குறிப்பாக, முருகன் பிறந்த வைகாசி விசாகத் தன்று பாடினால் இரட்டிப்பு பலன் கிடைக்கும்.

# குலதெய்வம் எது என்று தெரியவில்லையா?

## முன்னோர் கடைபிடித்த எளிய வழிமுறை



ஒவ்வொரு குடும்பத்திற்கும் பரம்பரை பரம்பரையாக குல தெய்வ வழிபாடு என்று ஒரு தெய்வத்தை வழக்கில் கொண்டிருப்பார்கள். அது மிக அவசியமானது. அலட்சியப்படுத்தக் கூடாத விஷயம். இந்த வழிபாட்டில், அவரவர்கள் சில விதி முறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர். நம் சந்ததியைக் காப்பாற்றுவது குல தெய்வ வழிபாடு தான். குலதெய்வம் எது என்று தெரியவில்லையென்றால், உங்களுக்கு விருப்பமான தெய்வங்களின் பெயர்களை விநாயகர் முதல் அனுமன் வரை சீட்டுகளில் எழுதுங்கள். அருகில் உள்ள கோயிலில் சுவாமிக்கு அர்ச்சனை செய்த பிறகு எழுதி வைத்திருக்கும் சீட்டுகளை சுவாமி பாதத்தில் வைத்து, ஏதாவது ஒன்றினை எடுக்கச் சொல்லி, அதில் உள்ள தெய்வத்தை குலதெய்வமாக ஏற்று வழிபாட்டைத் துவக்குங்கள்.

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

**தொடர்ந்து வெளிவர உதவுங்கள்**

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com



# மனித உடலையும் மனதையும் காக்கும் முத்திரைகள்

விரல்களை சில மாறுபட்ட கோணத்தில் வளைத்து நெளித்து செய்யப்படும் செயலை முத்திரை எனப்படும். இந்த விதத்தில் விரலுக்கு கொடுக்கும் அசைவுகள் உடலையும் மனதையும் காக்கும். தினமும் ஒவ்வொரு முத்திரையையும் தொடர்ச்சியாக செய்து வந்தால் நல்ல பலனை நாம் பெற முடியும். அதுவும் அதிகாலையில் முத்திரையை செய்தால் உடனடிப் பலன் கிடைக்கும். மேலும் ஒவ்வொரு முத்திரைக்கும் ஒவ்வொரு பெயர் உள்ளது. ஒவ்வொரு பிரச்சனைகளையும் ஒவ்வொரு பெயருடன் இந்த முத்திரைகள் தீர்த்து வைக்கும். தற்போது மிக முக்கியமான 11 முத்திரைகளைப் பற்றி பார்ப்போம்.

**சின் முத்திரை அல்லது ஞான முத்திரை:** கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல் நுனிகள் இரண்டும் தொட்டுக்கொண்டு இருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதை செய்வது மனத்தை ஒருநிலைப்படுத்த உதவும். மூளை செல்கள் புத்துணர்ச்சி பெறும். தலைவலி, தூக்கமின்மை, கவலை, கோபம் ஆகியவை விலகும்.

**வாயு முத்திரை:** ஆள்காட்டி விரலைக் கட்டை விரலின் அடிப்பகுதியில் வைத்து கட்டை விரலால் சிறிது அழுத்தம் கொடுக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதை செய்தால் வாயு தொடர்பான நோய்கள் போகும். ரத்த ஓட்டம் சீராகும்.

**சூன்ய முத்திரை:** நடுவிரலை, கட்டை விரலின் அடிப்பகுதியில் வைத்து கட்டை விரலால் அழுத்த வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதனால் காதில் நீர் வடிதல், காது வலி, காது அடைப்பு போன்றவை சீராகும். எலும்பு தளர்ச்சி மற்றும் இதய நோய் தவிர்க்கப்படும். தசைகள் வலுவடையும். தைராய்டு நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

**பிருதிவி முத்திரை:** பெருவிரல் மற்றும் மோதிர விரலின் நுனிப்பாகம் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதை தொடர்ந்து செய்து வந்தால் உடல் மற்றும் மூளை செல்கள் ஊக்கம் பெறும்.

**சூரிய முத்திரை:** மோதிர விரலை கட்டை விரலின் அடிப்பாகத்தில் வைத்து மெதுவாக அழுத்த வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் நீங்கும். உடலின் வெப்பம் அதிகரித்து ஜீரண சக்தி பெருகும்.

**வருண முத்திரை:** சுண்டு விரலின் நுனியை கட்டை விரலின் நுனி தொட்டு கொண்டிருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதனால், தோல் சம்பந்தமான நோய்கள் குணமாகும். தோல் வறட்சி, முகப்பருக்கள் வராமல் தடுக்கப்படும்.

**பிராண முத்திரை:** மோதிர விரல், சுண்டு விரல் இரண்டையும் மடக்கி, கட்டை விரலின் நுனியை தொட்டு கொண்டு இருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இந்த முத்திரையால் கண் கோளாறுகள் நீங்கி ஒளி பெறும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**அபான முத்திரை:** மோதிர விரல், நடுவிரல் இரண்டையும் மடக்கி கட்டை விரலின் நுனியை தொட்டு கொண்டிருக்கும்படி வைக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதை தொடர்ந்து செய்தால் மலச்சிக்கல், மூல நோய், வாயுத் தொல்லை விலகும். உடலிலிருந்து தேவையற்ற கழிவுகள் வெளியேறும்.

**அபான வாயு முத்திரை:** மோதிர விரல், நடுவிரல் இரண்டும் கட்டை விரல் நுனியை தொட்டு கொண்டிருக்க வேண்டும். ஆள்காட்டி விரல் கட்டை விரலின் அடிப்பாகத்தை தொட்டு கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்தால் இதய நோய் சரியாகும். ரத்த ஓட்டம் சீரடையும்.

**லிங்க முத்திரை:** இரண்டு கைகளையும் சேர்த்து பிடித்துக்கொண்டு இடது கட்டை விரலை மட்டும் நிமிர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். உடலில் உள்ள அதிக சூட்டை சமன்படுத்தும். கபத்தை அகற்றும். ஜலதோஷம், ஆஸ்துமா பிரச்சனைகள் விலகும். வறட்டு இருமல், நீர்க்கட்டு பிரச்னை சரியாகும்.

**அஸ்வினி முத்திரை:** பத்மாசனம் அல்லது வஜ்ராசனத்தில் அல்லது சுகாசனத்தில் அமர்ந்து கொண்டு குதத்தை சுருக்கி விரிவடையச் செய்வதே அஸ்வினி முத்திரையாகும். இதை படுத்து கொண்டும் செய்யலாம். ஆரம்ப காலத்தில் 10 முதல் 20 முறையும், பிறகு 30 முதல் 50 முறையும் செய்யலாம். இந்த முத்திரையை செய்தால் நரம்பு மண்டலம் ஊக்குவிக்கப்படும். வாயுத் தொல்லை, மலச்சிக்கல், மூலநோய் ஆகியவை நீங்க வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு கருப்பை வலுப்பெறும். பிரசவ காலத்தில் இயல்பான குழந்தைப் பேறு கிடைக்கும்.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# 16 வகை செல்வங்களும்

## அவற்றின் விளக்கங்களும்



1. புகழ் 2. வெற்றி 3. பணம் (பொன்), 4. இரக்கம் 5. அறிவு 6. அழகு 7. கல்வி 8. நோயின்மை 9. வலிமை 10. நல்விதி 11. உணவு 12. நன் மக்கள் 13. பெருமை 14. இனிமை 15. துணிவு 16. நீண்ட ஆயுள்

16 செல்வங்களைப் பெறும் வழிகள்

1.புகழ்: யாரும் புகழோடு தோன்றுவதில்லை. செய்யும் செயலிலும், நடக்கும் விதங்களிலும், நன்னடத்தை மற்றும் உதவி மனப்பான்மையான குணங்களைப் பொறுத்து தான் புகழ் கிடைக்கும்.

2. வெற்றி: வெற்றி என்பது பிறரை தோற்கடித்து நாம் வெற்றி பெறுவது அல்ல. நம்மை நாமே வெற்றி கொள்வதாகும். இன்றைய நிலையை விட நாளைய நிலைமை உயர்த்துவதற்கு கடின உழைப்பும், விடா முயற்சியும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

3. பணம் (பொன்) செழிப்பான வாழ்க்கைக்குத் தேவையானவைகளில் பணமும், பொன்னும் ஆகும்.அவற்றைப் பெறுவதற்குச் சிறந்த வழிகள் தொழில் செய்வது அல்லது நல்ல வேலைக்குச் சென்று சம்பாதிப்பது.

4. இரக்கம் இருப்பவர்களுக்கு கொடுக்கிற மனமில்லை. மனமிருப்பவர்களுக்கோ கொடுப்பதற்கு ஏதுமில்லை. இது தான் இன்றைய நிலை. அன்பு காட்டுவது, அரவணைப்பிற்கு கூட பணம் கேட்கும் காலம். இருப்பினும் வெகு சிலர் இரக்கம் காட்டி பல ஏழைகளுக்கு உதவி செய்து இறைவனைப்போல் தரிசனம் தந்து கொண்டிருக்கின்றனர்.

5. அறிவு கல்வியும், அறிவும் வேறு வேறு என்று உணர வேண்டும். படித்துத் தெரிந்து கொள்வது கல்வி. அறிவோ பார்த்து, கேட்டு, அனுபவப்பட்டு வருவது. அறிவுடையோருக்கு கல்வி குறைவாக இருந்தாலும் எந்த நேரத்தில் என்ன செய்தால் வாழ்க்கை நன்றாக வாழ முடியும் என்பதில் அதிக அறிவு இருக்கும்.

6. அழகு பார்த்தவுடன் கவருகின்ற தன்மையை அழகு என்று பெரும்பாலோர் எண்ணிக்கொண்டு சற்று கருப்பாக, குண்டாக இருப்பவர்கள் 'தாங்கள் அழகில்லையே' என்று தாழ்வு மனப்பான்மையோடு வாழ்ந்து வரு கின்றனர். ஆனால் அவர்களுக்குள் பலவகையான அழகுகள் இருப்பதை தெரிந்துகொண்டால் இந்த மாதிரி தாழ்வுமனப்பான்மை எண்ணங்கள் வரவே வராது. சில வகை அழகுகள் இதோ! குரல் இனிமை, கவரும் பேச்சு, தாளம் போட வைக்கும் பாட்டு, நளினமான நடனம், உடை அழகு, அறிவு, அன்பு, கருணை காட்டுதல் இன்னும் பல.

7. கல்வி கல்வி பெரிதாக தேவைபடா விட்டாலும் அடிப்படை கல்வி மிகமிக அவசியம். அதுவும் படித்து மனப்பாடம் செய்யும் ஏட்டுக் கல்வி வாழ்க்கை வாழ்வதற்கு உதவாது. அதோடு செய்முறை பயிற்சி வளமான துணையோடு கையும் கொடுக்கும். வளமான வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு கைத்தொழிலை கற்றுக்கொள்வது நல்லது.

8. நோயின்மை நல்ல உணவு, சிந் தனை மற்றும் செயல் நோயற்ற வாழ்வுக்கு ஆணி வேராகும். 'நோயின்மை' ஒருவன் வாழ்நாளில் பெற்ற விலைமதிப்பில்லாத பொக்கிசமாகும். எங்கே நோய் இல்லையோ அங்கே மகிழ்ச்சி பொங்கி வழியும்.

9. வலிமை உடல் வலிமை பெற உடற்பயிற்சியும், மனவலிமை பெற தியானம் மற்றும் தன்னம்பிக்கை வேண்டும். வலிமை பெற அதிக நேரம் செலவழிக்க வேண்டியதில்லை. வெறும் 5 முதல் 10 நிமிடங்களே போதுமானது.

10. நல்விதி நல்ல எண்ணமும், செயலும் நல்விதிக்கு அடிப்படை காரணமாக விளங்குகின்றது.'விதி' என்பது கஷ்டம் தருவது மட்டுமல்ல. நன்றாக மகிழ்ச்சியோடு இருப்பது கூட விதியாகும். ஆக விதி என்பது உன் கையில் தான் இருக்கின்றது. அதை நமக்கு சாதகமாக ஏற்படுத்திக்கொள்வது நமது புத்தி சாலித்தனத்தில் இருக்கின்றது.

11. உணவு உடை, இருப்பிடம் முக்கியமானதாக இருந்தாலும் வேளா வேளைக்கு நல்ல உணவு உண்ணுவது அவசியம் வேண்டும். உணவு , உடலும் அறிவும் வளர்வதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பதாகும்.

12. நன் மக்கள் பொதுவாக குழந்தையாக இருக்கும்போது சூது, வாது ஏதும் தெரிவதில்லை. தீ ஜுவாலை கூட கவர்ச்சி மிக்க பொருளாகத் தெரியும். தீ கங்கு கூட சாப்பிடும் பழமாகத் தெரியும். ஆனால் அவர்களை நன்மக்களாக வளர்ப்பது பெற்றோர் கையிலும், சிறந்தவர்களாக உருவாக்குவது ஆசிரியர்கள் கையிலும் , அவர்களை நன்றாக உபயோகித்துக் கொள்வது மக்கள் கைகளிலும் இருக்கின்றது.

13. பெருமை பிறர் பெருமைபட வாழ்தல் ஒரு மனிதனுக்கு வாழ்நாளில் சாதனையாகும். ஆனால் 'தற்பெருமை' என்பது அறவே விரும்பத்தகாததாகும். பெரும்பாலும் தற்பெருமை பேசுபவர்களைச் சுற்றிலும் ஒரு கூட்டம் வெறும் பணத்திற்காகவும், பதவிக்காகவும் வேறு பல எதிர்பார்ப்போடும் இருப்பார்கள். உண்மையான பெருமை என்பது சர்க்கரையைத் தேடி எறும்பு வருவது போல நல்ல செயல்களைச் செய்யும் போது பெருமை தானாக தேடி வரும்.

14. இனிமை பேச்சில் இனிமை, நன் மக்களிடம் பழகுவதில் இனிமை, சொற்களில் இனிமை, எழுதுவதில் இனிமை ஆகியவைகள் என்றுமே நன்மதிப்பும், மரியாதையும் கிடைக்கும்.

15. துணிவு துணிவு இல்லையேல் வெற்றி இல்லை. திட்டமிடுதல் துணிவுக்கு அடித்தளம். திட்டம் சரியாக இருந்தால் எந்த செயலையும் துணிவோடு செய்யலாம். வெற்றி பெறலாம்.

16. நீண்ட ஆயுள் மேற்கூறிய எல்லா (15) செல்வங்களை பெற்றுவிட்டால் நீண்ட ஆயுளுக்குத் துணையாய் இருக்கும்.

# ஞானம் தோன்றினால் அமைதி தவழும்

- எல்லா உயிர்களிடமும் அன்புடன் நேசக்கரம் நீட்டுங்கள். ஒழுக்கம் என்னும் உயர்ந்த பாறை மீது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். மெய்யறிவிச்ல் மனதில் உண்டாகும் மயக்கத்தையும், அறியாமையையும் போக்குங்கள்.
- கூரை செம்மையாக வேயப்பட்டிருந்தால் வீட்டிற்குள் மழைநீர் இறங்காதது போல, நன்னடத்தையும், நன்னெறிப் பயிற்சியும் கொண்ட மனத்தில் ஆசைகளுக்குச் சிறிதும் இடம் இருக்காது.
- ஒருவன் ஆயிரம் படைகளை கூட வெற்றி கொள்ளலாம். அது மட்டுமே வீரமல்ல. எவனொருவன் தன்னைத் தானே அடக்கக் கற்றுக் கொள்கிறானோ அவனே வெற்றி வீரர்களில் முதன்மையானவன்.



- மனிதன் தீய எண்ணத்தோடு பேசிச்லும், செயல் புரிந்தாலும் வண்டிச்சக்கரம் மாடு செல்லும் திசையை நோக்கிச் செல்வது போல, துன்பம் அவனைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
- நிலையில்லாத மனம் படைத்தவர்களும், உண்மையான அறத்தை அறியாதவர்களும், மனதில் அமைதியற்று குழம்பிக் கொண்டிருப்பவர்களும் எக்காலத்திலும் ஞனத்தை அடைய முடியாது.
- உண்மையான ஞானம் நம்மிடம் தோன்றி விட்டால், மனம் பூரண விடுதலை அடைந்து விடும். அப்போது சொல்லும், செயலிலும் அமைதி தவழும்.
- வயலில் களைகள் பயிருக்கு தீமை தருவது போல, மனிதர்களுக்கு ஆசையே எல்லாத் தீமைகளையும் உண்டாக்குகிறது.
- எந்தக் காலத்திலும் பகைமையை பகைமையால் தணிக்க முடியாது. பகைமை அன்பால் மட்டுமே போக்க முடியும்.
- சோம்பித் திரியாதீர்கள். காமத்தோடு புலன் இன்பங்களை நாடாதீர்கள். ஆக்கமும், கேடும் தருகின்ற இருவழிகளை ஆராய்ந்து அறிவின் துணை கொண்டு ஆக்கம் தரும் பாதையில் நடை போடுங்கள்.
- நியாயமான முறையில் செல்வத்தை சேர்த்து, அதனைக் கொண்டு இல்லாத ஏழைகளுக்கு தானம் செய்து வாழ்பவன் பெரும் புண்ணியங்களைத் தேடிக் கொள்கிறான்.
- மனிதர்கள் தங்கள் நாக்கினைக் காத்துக் கொள்வது அவசியம். அப்போது எல்லா நன்மைகளும் வந்து சேரும்.